
பதிவு என் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று




| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, | ரூ 4- 0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஆடு கார்த்திகை-மீ 27-உ (12—12—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 33.

## உண்மையான கதர்

### கேட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,

ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்

அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

### சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், உச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி

### பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.

ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில்

## மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-ஆு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர்

### சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், நாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு

### அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

ரோஜா முத்தையா

## விஸ்வாதி இலேகியம்.

பித்த வாயுவுக்கும் அஜீரணத்துக்கும்.

ஆகாரம் ஜீரணமாகாமல் ஏற்படும் வயிற்றுப் பிசம், வயிற்றுவலி, எப்பம், மார்நோய், பக்க நோய், முதலியவைகளை மூன்று பொழுதில் நீக்கக் கூடியது. பத்தியமில்லை.

40 வேளை சாப்பிடக்கூடிய இலேகியம் ரூ. 1—8—0.

## கீழ்காய் நெல்லித் தைலம்.

இத் தைலத்தை வாரம் இருமுறை தலை முழுகுவதனால் மேக, பித்த, உஷ்ணங்களால் ஏற்படும் கண்ணெரிச்சல், கை கால் எரிச்சல், மயக்கம், தலைவலி, மயிர் உதிர்தல் முதலியவைகள் நீங்கும். மூளைக் குளிர்ச்சியும் கொழுமையையும் உண்டாக்கும். நாள்தோறும் சிகையில் தடவி சீவிக்கொள்ளலாம்.

கீழ்காய் நெல்லித் தைலம்

8 பலம் டின் 1-க்கு ரூ. 1—4—0

ஷை டின் 3-க்கு ரூ. 3—4—0

வி. பி. தபாற் செலவு வேறு

எம். சி. நடேச வைத்தியர்,

சுதேச ஔஷதசாலை,

கு. மேல வீதி, கும்பகோணம்.

---

## "ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகடத்தேவாரம், திருவாசகம், திருபுகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானத்தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0

1 அணு ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனாம்.


[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன், ஆபீஸ்.

சௌகார் பேட் போஸ்டு, ஜி. டி. மதராஸ்.

---

இனாம்! இனாம்!!

டேபில் டயம்பீஸ் இனாம்!!!



(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக் கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனாம் டைம்பீஸுடன் ஷை ரிஸ்டு வாட்சு விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம்:—

ஸ்ரீ பாலினி வாட்சு கம்பெனி,

15-A பீட், அண்ணா பிள்ளைத் தெரு,

மதராஸ்.

---

## மஹேந்திரஜாலம்

இது சென்ற மஹா யுத்தத்தின்போது ருஷ்யாவைத் தலைகீழாக வீழ்த்திய மாயா விநோதப் பாதிரி ரஸ்புட்டீனின் மெய்யான சரித்திரம். இதனால் ஆஷாடபூதிகளின் வேஷத்தை யறியலாம். பாதிரியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தபாற் செலவுடன் விலை ரூ. 1 0 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்.

படங்களுடன் விலை ரூ. 2 0 0

பண்டிதை மேஸ்மேரிஸா

படங்களுடன் விலை ரூ. 1 8 0

தபால் பெட்டி நெ. 248,

சென்னை.

---

## "தமிழன்"

(வாரப்பத்திரிகை)

பூர்வ தமிழர் சமயம் யாது?

தமிழர் தாழ்ந்தவரானதேன்?

தாழ்த்தப்பட்டவர் முன்னேறுவதெப்படி?

இவைகளையறிய "தமிழன்" பத்திரிகை அவசியம் படிக்கவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டுக்கு வருட சந்தா ரூ. | 3 | 0 | 0 |
| வெளிநாட்டுக்கு " | 4 | 0 | 0 |

மானேஜர்,

"தமிழன் ஆபீஸ்",

ஆண்டர்சன்பேட்டை,

கோலார், கோல்டுபீல்டு.

---

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0

12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,

220 தங்கசாலைத் தெரு, சென்னை

---

## சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம்



குடும்ப ரஹசியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.

64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாஸம் பிரஸ்,

அருணாசல முதலி வீதி, மதராஸ்

---

## எது வேண்டும்?

| | |
|---|---|
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | ரூ. 2—4 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1—8 |
| மனோவசிய சாஸ்திரம் | 1—8 |
| ரதி சாஸ்திரம் | 1—4 |
| ஸ்திரீ புருஷ ரகசியம் | 1—0 |
| சதிபதிகளின் மர்மம் | 1—0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | 1—0 |
| ரதிமதன சிங்கார ரஹஸ்யம் | 1—0 |
| மதனரதி ரஹஸ்யம் | 1—0 |

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாதவெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,

97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

---

"பணம் சம்பாதிக்கப் பாதைகள் 200"

என்னும்

## 200 தொழில் முறைகள்.

4 பாகங்கள், 34 அத்தியாயங்கள்.

சொற்ப தொகையினால் சோப், செண்டு முதலியவைகளைச் செய்ய ஆரம்பித்தவர்கள் இப்போது லட்சாதி பிரபுக்களாய் இருக்கிறார்கள். பீச்சாம் ஹாலோவே முதலிய சிலர் பேர்போன மருந்துகளைச் செய்து கோடீஸ்வரர்களாக ஆகிவிட்டார்கள். இதுபோன்ற தொழில்களை நீங்கள் என் சுலபமாய் ஆரம்பிக்கக்கூடாது.

200 அபூர்வ தொழில்களின் செய்முறைகளடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 4—0—0. வி. பி. சார்ஜ் வேறு.

இதன் முழு விவரமடங்கிய 14 பக்கம் துண்டு புஸ்தகத்திற்கு 1 அணா ஸ்டாம்புடன் எழுதவும்

ஆர்ட் புக்ஸ் பப்ளிஷிங் கம்பெனி,

C, திருச்சினாப்பள்ளி.

---

நம்பிக்கையான

## வியாபார ஸ்தலம்.

சகல விதமான புஸ்தகங்கள்

கதர் துணிகள் மருந்துகள்

கடிகாரம் ஷராட் சாமான்

முதலிய இதர எல்லா

சாமான்களும்

கிடைக்கும்.

முன்பணத்துடன் ஆர்டர்

அனுப்பவும்.

விலாசம்:—

என். தண்டபாணி

கம்பெனி.

தபால் பெட்டி 292.

6-99 பவழக்காரத்தெரு,

சென்னை.

# தமிழ் மாகாண மகாநாடு.

## கோகலே ஹாலில் ஐயங்கார் ராஜ்யம்.

### ஸ்ரீ தண்டபாணி பிள்ளை தாக்கப்பட்டார்.

ஜனங்களின் மனக்கோதிப்பு.

**மகாநாட்டில் பலாத்காரம்.**

(நமது நிருபர் எழுதுகிறார்.)

சனிக்கிழமை பகல் 1 மணிக்கு மகாநாடு கோகலே ஹாலில் கூடியது. முதலில் தேசிய கீதங்கள் பாடப்பட்டவுடன் வரவேற்பு சபைத்தலைவர் பிரசங்கமும், அக்கிராசனர் பிரசங்கமும் ஆங்கிலத்தில் வாசிக்கப்பட்டன. 4 மணியானதும் மகாநாடு மறுதினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டு 4½ மணிக்கு விஷயாலோசனைக் கமிட்டி கூடியது.

ஸ்ரீ சத்தியமூர்த்தியின் ஆர்பாட்டம்.

விஷயாலோசனைக் கமிட்டி கூடியதும், விஷயாலோசனைக் கமிட்டியைச் சேராத மற்றவர்கள் தயவுசெய்து வெளியேபோக வேண்டுமென்று ஸ்ரீசத்தியமூர்த்தி எழுந்து சொன்னார். பத்திரிகைப் பிரதிநிதிகள் இருக்கலாமா வென்று சுதேசமித்திரன், ஹிந்து முதலிய பத்திரிகைப் பிரதிநிதிகள் கேட்டதற்கு இருக்கலாமென்று முதலில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சொன்னார். ஆனால் இந்தப் பக்கம் திரும்பியதும் “தமிழ்நாடு” “சுதேசோதயம்” “நவசக்தி” “லோகோபகாரி” பிரதிநிதிகள் அவருடைய கண்களுக்குப் புலப்பட்டார்கள். உடனே திடுக்கிட்டுப்போய் எல்லாப் பத்திரிகைப் பிரதிநிதிகளும் வெளியே போகவேண்டியதுதான் என்று சொல்லிவிட்டார்.

மந்திரி பதவி.

விஷயாலோசனைக் கமிட்டியில் மந்திரி பதவிகளை ஒப்புக்கொள்ளவேண்டு மென்று ஸ்ரீ ஜார்ஜ் ஜோஸப் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது பலமான வாதம் நடைபெற்றது. ஒத்துழையாமை இயக்கத்தில் தியாகஞ் செய்த தேசபக்தர்களெல்லாம் ஸ்ரீமான் ஜோஸப் பக்கமும், பின்னால் காங்கிரஸில் நுழைந்தவர்களெல்லாம் எதிர்க்கட்சியிலும் சேர்ந்துகொண்டார்கள். கடைசியாக ஸ்ரீமான் ஜோஸப் தமது தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொண்டார். மறுநாள் காலையில் புதிய மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கு தேர்தல் நடந்தது.

இரண்டாவது நாள்

ஞாயிற்றுக்கிழமை (5ௗ.) பகல் 12 மணிக்கு மறுபடியும் மகாநாடு கூடியது.

ஸ்ரீ குழந்தையின் உளறல்

கடவுடிக்கை ஆரம்பமாயிற்று. தேர்தலில் உதவி புரிந்தவர்களுக்கு வந்தனமளிப்பதாக ஒரு தீர்மானங் கொண்டுவரப்பட்டபோது ஸ்ரீமான் குழந்தை என்பவர் பேசஎழுந்தார். “தமிழ் நாடு” “குடி அரசு” எதிரிடையாய் எழுதிவந்தன வென்றும் புளுகுக் குவியல்களைக் குவிக்தன வென்றும், அவைபோலிப்பத்திரிகைகளென்றும் என்னென்னவோ உளறிக்கொண்டிருந்தார். இச்சமயம் “சுதேசோதயம்” பத்திரிகையையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு பிராமணர் சொன்னார். ஸ்ரீ குழந்தை, அதைப்பற்றி தாம் கேள்விப்பட்டதே யில்லையென்று கேலியாய்ச்சொன்னார். “தமிழ் தெரிந்தாலல்லவா பத்திரிகைகளை உமக்குத் தெரிய முடியும்” என்று கூட்டத்திலிருந்த ஒருவர் கேட்டார். ஸ்ரீமான் குழந்தை பிராமணரின் கரகோஷங்களுக்கிடையே தமது வசைபுராணம் பாடும் சாமர்த்தியத்தை விளக்கிக் காட்டிவிட்டு உட்கார்ந்துவிட்டார்.

ஸ்ரீ பிள்ளையின் விஜயம்

பின்னால் சிறிது நேரங்கழித்து ஸ்ரீமான் தெண்டபாணி பிள்ளைவந்து மேடைமீது உட்கார்ந்தார். அவர் உட்கார்ந்து அரைமணி நேரங்கழிந்தபின்பு அவரைச் சுற்றி தொண்டர்கள் கூட்டம்போட்டார்கள். மற்றவிவரங்களுக்கு அவர் எழுதியிருக்கும் கடிதத்தை மற்றொரு பத்தியில் பார்க்கவும். அவர் எழுந்து தலைவரைப்பார்த்து “தலைவரே சில போக்கிரிகள் என்னை இங்கிருக்கக் கூடாதென்று தொந்தரவு செய்கிறார்கள். எனக்கு இங்கு இருக்க உரிமை யுண்டா இல்லையா?” என்று கேட்டார். உடனே சபை யெங்கும் கூச்சலும் குழப்பமுமாய் விட்டது. ஸ்ரீமான் பிள்ளை மறுபடியும் உட்கார்ந்துகொண்டார். தொண்டர்கள் அவரை மறுபடியும் தூக்கினார்கள். பலர் சூழ்ந்து கொண்டு அவரை வெளியே இழுத்தார்கள். கழுத்தில் போட்டிருந்த வேஷ்டியை சிலர் பிடித்து இழுத்தார்கள். ஆனால் இவைகளை யெல்லாம் ஸ்ரீ பிள்ளை லட்சியஞ் செய்யாமல் சிரித்துக்கொண்டிருந்தார். அவருக்கு இயற்கையாயுள்ள வேடிக்கைக் களிப்பில் அவர் மனம் சென்றதால் முதலில் கோபம் வரவில்லை. முன்கோபக்காரராயிருந்தால் நேற்று நிலைமை வேறுவிதமாய் முடிந்திருக்கும். தொண்டர்கள் அட்டகாசம் பலமாய்ப் போய்விடவே ஸ்ரீ பிள்ளைக்கு கொஞ்சம் கோபம் வந்தது. அவ்வளவுதான். 30 தொண்டர்கள்போல் அவரை இழுத்து பிடித்துக் கொண்டிருந்தபோதிலும் ஒரு விநாடியில் அவ்வளவுபேரையும் உதறித் தள்ளிவிட்டு அக்கிராசனர்முன்பு வந்துவிட்டார். இச்சமயம் ஸ்ரீமான் சாமிநாதன் செட்டியார் செய்த உதவி பாராட்டத்தக்கது.

தலைவர்களின் மௌனம்.

இவ்வளவு தூரம் பலாத்காரச செயல்கள் நடந்துகொண்டிருந்தும் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் ஒருவார்த்தைகூட சொல்லவில்லை. தொண்டர்களின் செய்கையைப்பார்த்துக்கொண்டு “அஹிம்சா தர்மத்தை கடைப்பிடித்து” பேசாமல் இருந்தார்கள். அதற்கு என்னகாரணமோ தெரியவில்லை. ஸ்ரீ பிள்ளை எல்லாரையும் உதறித் தள்ளிவிட்டு வந்தவுடன் ஸ்ரீ பி. டி. ஆஷர் சேட் அவரை தன் பக்கத்தில் வைத்து அணைத்துக்கொண்டார். சபை ஒரே குழப்பமாயிருந்தது. ஒருவருக்காவது என்ன நடந்ததென்று தெரியவில்லை. பிராமணரின் கூச்சலும், தொண்டர்களின் ஆர்ப்பாட்டமும்பிரதிநிதிகளைக்கலக்கிவிட்டன. உண்மையை அறிந்து ஜனங்களுக்குச் சொல்ல ஒரு தலைவர்கூட முன்வரவில்லை. பிரதிநிதிகளுக்கு உண்மை தெரிந்திருக்குமானால் நேற்று ஐயங்கார் ராஜ்யம் கோகலே ஹாலில் நடைபெற்றிருக்காது.

எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றல்.

ஸ்ரீமான் பிள்ளையை வெளியேற்றவேண்டுமென்று சிலர் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும்போது, ஸ்ரீ சத்தியமூர்த்தி எழுந்து “போக்கிரிகள்” என்று சொல்லியதை ஸ்ரீ பிள்ளை வாபஸ் வாங்கிக்கொண்டதாகச் சொன்னார். ஸ்ரீ பிள்ளை கையை அசைக்கவே கூச்சல் தணியவில்லை. இச்சமயம் ஸ்ரீ சீனிவாசய்யங்கார் ஸ்ரீ தண்டபாணி பிள்ளையைப்பார்த்து “எதற்காக இங்கே வந்தீர்? எங்களையெல்லாம் திட்டிய பிறகு உமக்கு இங்கு வேலையென்ன?” என்று கேட்டார்.

பிள்ளை:—இது உமது மகாநாடுமல்ல, பிராமணர் மகாநாடுமல்ல. தமிழ் மாகாண மகாநாடு. எனக்கு இங்குவர உரிமையுண்டு.

அக்கிராசனர்;—அவர் இருக்கட்டும்.

சீ. ஐயங்கார்:—அவர் கண்டபடி எங்களையெல்லாம் திட்டியபடியால் இங்கு இருக்கக் கூடாது.

ரங்கசாமி ஐயங்கார்:—உமக்கு இங்கு வர என்ன யோக்கியதை இருக்கிறது.

பிள்ளை:—உமக்கு எவ்வளவு யோக்கியதை உண்டோ அதைவிட அதிகமாக எனக்கு உண்டு.

சத்திய மூர்த்தி:—அவருடைய டிக்கட் பொய்யானது.

சீனிவாச ஐயங்கார்:—(ரங்கசாமி ஐயங்காரைப்பார்த்து) அவர் பிரதிநிதி அல்லவென்று ஜனங்களுக்குச் சொல்லுங்கள்.

ரங்கசாமி ஐயங்கார் (எழுந்த ஜனங்களின் கோபத்தையும் பார்க்காமல்) ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையவர்கள் போக்கிரிகள் என்று சொல்லியதற்காக வருந்துகிறார். அவர் பிரதிநிதி டிக்கட்டை வைத்திருந்த போதிலும் அது செல்லத்தக்கதல்ல. எந்த சபையும் அவரை பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படாததால் அவர் பிரதிநிதியல்ல

கூச்சல் அதிகமாயிற்று. ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோஸப் எழுந்து ஏதோ ஆட்சேபித்து பேசினார். ஆனால் கூச்சல் அதிகமாயிருந்தபடியால் ஒன்றும் கேட்கவில்லை. புதிய பிராமணத் தலைவர்களும் ஸ்ரீமான்கள் ஜார்ஜ்ஜோஸப் டாக்டர் மேனன் இவர்களின் வார்த்தையை காதில் போட்டுக்கொள்ளவில்லை.

ஸ்ரீ கந்தசாமி செட்டியார்:—அவரை வெளியே அனுப்பிவிடவேண்டியதுதான்.

ஸ்ரீ கோவிந்தராஜ முதலியார:—அது தான் சரி.

ஸ்ரீ பிள்ளை:—(அக்கிராசனரைப்பார்த்து) கண்டபேர் கண்டபடி என்னைப்பற்றி பேசுகிறார்கள். எனக்கும் பேச அனுமதி கொடுக்கவேண்டும். நான் டிக்கட்டு வைத்துக் கொண்டுதான் வந்திருக்கிறேன். சும்மா வரவில்லை

அக்கிராசனர்:—கூட்டத்தை சமாதானப்படுத்தும் வழியில் பேசுங்கள்.

ஸ்ரீ பிள்ளை எழுந்து பேச ஆரம்பித்தார். குழப்பம் அதிகமாக இருந்தபடியால் பேச முடியாமல் உட்கார்ந்தார்.

ஸ்ரீ சீனிவாசஐயங்கார்:—அவர் வெளியே போகவேண்டியதுதான்.

ஸ்ரீ பிள்ளை—டிக்கட் வைத்திருக்கிறவரையில் எனக்கு இங்கிருக்க உரிமையுண்டு.

அக்கிராசனர்:—அவருடைய பிரதிநிதி டிக்கட்டை நீங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால் "கௌரவ விசிட்டர்" என்ற முறையில் அவரை நான் என் பக்கத்தில் வைத்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீமான்கள் சீனிவாச ஐயங்காரும், ரங்கசாமி ஐயங்காரும் இதை ஆட்சேபித்தபோதிலும் அக்கிராசனர் பிடிவாதமாய் ஸ்ரீ பிள்ளையை வெளியே அனுப்ப மறுத்துவிட்டபடியால் அதற்குமேல் ஒன்றும் பேசமுடியாமல் மௌனமாயிருந்தார்கள் சிறிது நேரஞ் சென்றபின்பு சபையில் அமைதி ஏற்பட்டு காரியங்கள் ஒழுங்காய் நடைபெற ஆரம்பித்தன. அக்கிராசனர் ஒருவரே பட்சபாதமின்றி நேற்று நடந்து கொண்டார். அவருடைய செய்கையை எல்லாரும் போற்றுகிறார்கள். ஸ்ரீமான் பிள்ளை அக்கிராசனர் பக்கத்திலேயே இருந்து தமது உரிமையை நிலை நாட்டினார்."

[illegible] மணி நேரஞ் சென்றதும் புதிய மந்திரி ஸ்ரீ ரங்கநாத முதலியார் வந்தார். அவர் [illegible] கொள்கையை ஒப்புக்கொள்ள [illegible] யென்பதற்காக தொண்டர்களோ, [illegible] தலைவர்களோ அவருக்கு அவமரியாதை [illegible] உண்டுபண்ணாமல் மரியாதையாக [illegible] நடந்தது நல்லகாலந்தான்.

[illegible] பிராமணர்களுக்குப் பின்னால் தொழி[illegible] ஷபமாக தீர்மானம் வந்தபோது [illegible] சபையில் சிறிது குழப்பம் ஏற்[illegible] சேலம், திருவண்ணாமலை, காஞ்சி [illegible] முதலிய இடங்களில் தொழிலாளருக்கு இனமாக பிரதிநிதி டிக்கட்டுகள் கொடுத்திருக்கும்போது இந்த மகாநாட்டில் மட்டும் கொடுக்க மறுத்ததைப்பற்றி ஸ்ரீமான் மாணிக்கதால் ஆட்சேபித்துப் பேசினார். ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ரங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி முதலியவர்கள் எழுந்து பதில் பேச முடியும்போது தொழிலாளர் விடவில்லை. அவர் பேசமுடியாமல் உட்கார்ந்தார்கள் கடைசியாக தொழிலாளர் சிலர் மிகுந்த வருத்தத்தோடு மகாநாட்டை விட்டு வெளியே போய்விட்டார்கள். இரவு சுமார் 9-30-மணிக்கு மகாநாடு கலைந்தது. அடுத்த மகாநாட்டை மதுரையில் நடத்தும்படி மௌலானா சாகிப் கேட்டுக்கொண்டார்.

---

## நேரில் பார்த்தவர்களின் கண்டனம்

நேரில் பார்த்தவர் எழுதுகிறார் :—

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னை கோகலே ஹாலில் ஐயங்கார் ராஜ்யம் முழு அமுலில் நடந்தது. இதுவரை பிராமண ராஜ்யத்தின் கொடுமையை அறியாமல் இருந்த பலர் நேற்று நேரில் பார்த்து அனுபவிக்க நேர்ந்தபடியால், நேற்றைப் தினம் பிராமணரல்லாதாருக்கு ஒரு சுபதினமாகும். பிராமணரல்லாதாரைச் சில தலையாட்டிகளைக் கொண்டு எவ்வளவு கேவலமாக நடத்த முடியுமோ அவ்வளவையும் நேற்று கோகலே ஹாலில் நடத்திக்காட்டினார்கள். ஸ்ரீமான்கள் சீனிவாச ஐயங்கார், ரங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி ஆகிய மும்மூர்த்திகளும் நேற்று கோகலே ஹாலில் செய்த ஆர்ப்பாட்டங்களை என்னால் எழுதிக் காட்ட முடியவில்லை. நேரில் பார்த்தவர்களே முழுவதையும் கண்டறியக் கூடும். கொஞ்சங் கூட கௌரவ புத்தியில்லாமல் இந்த மும்மூர்த்திகளும் மற்றப் பிராமணர்களும் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையைத் தொண்டர்களைவிட்டுத் தூக்கிக்கொண்டு போகும்படி ஏவுவானேன்? ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை செய்த குற்றம் என்ன? ஸ்ரீமான் பிள்ளை ஜஸ்டிஸ் கட்சியாருக்கு அநுகூலமாக பிரசாரம் செய்தாராம். ஆகையால் மகாநாட்டில் அவருக்கு இருக்க உரிமையில்லையாம்! அபிப்பிராய பேதமுள்ளவர்களுக்கு காங்கிரஸில் இடமில்லையா? முன்னால் ஒருவர் காங்கிரஸிற்கு விரோதமாயிருந்தாலும், இப்பொழுது அநுகூலமாய்த் திரும்பிவிட்டால் அவரைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதா?

### யோக்கியதை என்ன?

சேர்த்துக் கொள்ளக் கூடாதென்றால், அட்வகேட் ஜெனரலாயிருந்து, ஒத்துழையாமை சட்ட விரோதமென்று சொன்ன சீனிவாச ஐயங்காருக்குக் காங்கிரஸில் இருக்க இப்பொழுது என்ன யோக்கியதை? ஒத்துழையாமை காலத்தில் அதை குழி வெட்டிப் புதைக்க முயன்ற சத்தியமூர்த்தி ரங்கசாமி அய்யங்காருக்கு இப்பொழுது காங்கிரஸில் என்ன வேலை? இவர்களெல்லாம் காங்கிரஸிலிருக்கும்போது ஸ்ரீ தண்டபாணி பிள்ளை மட்டும் ஏன் இருக்கக்கூடாது? மும்மூர்த்திகள் தண்டபாணி பிள்ளையைவிட எந்த வகையில் யோக்கியதையில் சிலாக்கியமானவர்கள்? தண்டபாணி பிள்ளையைப் போல எப்பொழுதும் கத்தர் கட்டுகிறார்களா? இல்லையே! காங்கிரஸ் ஜெயில் திட்டங்களை வைத்திருக்கும்போது ஓடி ஒழிந்தவர்கள் இப்பொழுது முன்னால் நின்று கொண்டு பழைய காங்கிரஸ் வாதிகளைக் காங்கிரஸ் வாதிகளல்லவென்று சொல்லுவதானால் இதைவிட அயோக்கியத்தனம் எங்காவது உண்டா?

### மேடையில் காலித்தனம்.

ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையைத் தொண்டர்கள் வெளியே இழுக்கும்போது மகாநாட்டு மேடை கெருக்கூட்டம் மாதிரி இருந்ததே யொழிய, கௌரவமானதாகத் தோன்றவில்லை. பல தொண்டர்கள் பிள்ளையைத் தூக்க முயற்சித்து அங்குமிங்கும் இழுக்கும்போது பிராமணத்தலைவர்கள் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தார்களேயொழிய கொஞ்சங்கூட ஆட்சேபனை செய்யவில்லை. அஹிம்சா தர்மக் கொள்கையைப் பற்றிப் பேசுவதெல்லாம் வெறும் "ஹம்பக்" என்பது நேற்று தெரிந்துபோயிற்று. மனிதத் தன்மையோ ஜீவகாருண்யமோ கொஞ்சமாவது பிராமணத் தலைவர்களுக்கு இருந்திருந்தால் ஸ்ரீமான் பிள்ளையை தொண்டர்கள் இழுக்கும்போது பார்த்துக்கொண்டு சும்மாயிருந்திருக்கமாட்டார்கள். அச்சமயம் அவர்கள் நடந்துகொண்ட தோரணையும் பேசிக்கொண்ட பான்மையும் வஞ்சந்தீர்க்க அவர்கள் தீர்மானித்திருந்ததாகவே தோன்றிற்று எல்லாரும பொம்மைகள்மாதிரிப் பேசாமல் இருந்தார்களேயொழிய ஒருவராவது தொண்டர்களைச் சும்மாயிருக்கும்படி சொல்லவில்லை.

### ஜனங்களின் கோதிப்பு.

இவ்வளவு அக்கிரமங்கள் மேடையில் நடந்துகொண்டிருந்த போதிலும் கீழே உட்கார்ந்திருந்த ஜனங்களுக்கு விவரமாய் ஒன்றும் தெரியவில்லை. தண்டபாணி பிள்ளை செய்த குற்றமென்ன. பிராமணத்தலைவர்கள் அவர் மீது பாய்வது ஏன். தொண்டர்களை ஏவுவது ஏன் என்ற விஷயங்களெல்லாம் விவரமாக அவர்களுக்குத் தெரியாதபடியால் ஏகக்கூச்சலும் குழப்பமாயிருந்தபடியால், அவர்கள் ஒன்றும் தோன்றாமல் திகைத்துப்போயிருந்தார்கள். தொண்டர்களுஞ்சேர்ந்து கத்தினார்களே யொழிய வேறு எவரும் இதில் கலந்துகொள்ளவில்லை. பின்னால் அவர்களுக்கு உண்மை தெரிந்த பின்பு அவர்கள் மனம் கொதித்த கொதிப்புக்கு அளவில்லை. இந்த உண்மை அப்பொழுதே தெரிந்திருக்குமானால் மகாநாட்டில் விபரீதங்கள் பல ஏற்பட்டிருக்கும். தெரியாமல் போனது அதிர்ஷ்டவசமேயாகும். ஜனங்களின் மனக்கொதிப்பைப்பற்றி அப்பொழுது நான்பார்த்தவரையில் சிந்திக்கும்போது மகாநாடு நேற்று தப்பித்தது பெரிய அதிசயமாகவே தோன்றுகிறது.

### அதிகாரமமதை.

நேற்று நடந்த எல்லா நடவடிக்கைகளிலும் ஸ்ரீ எ. ரங்கசாமி ஐயங்காரின் நடத்

தையே மிஞ்சிய "சிலாக்கியமான்து." வெறி கொண்ட தொண்டர்களை ஏவி ஸ்ரீ பிள்ளையை அப்புறப்படுத்த முயலும்போது, தீப்பிடித்த வீட்டுக்குக் காற்றடிக்கும் மாதிரி இவரும் சேர்ந்துகொண்டார். "தண்டபாணி பிள்ளைக்கு இங்கு இருக்க உரிமையில்லை. அவர் காங்கிரஸ்காரராயிருக்க யோக்கியதையில்லை. அவருடைய பிரதிநிதி டிக்கட் உண்மையானதல்ல. அவர் வெளியே போகவேண்டியதுதான்" என்று மேடை மீது ஆனந்தத் தாண்டவமாடிக்கொண்டு சொன்னார். ஐயங்காரைவிட தண்டபாணி பிள்ளைக்கு எந்த விதத்தில் யோக்கியதை குறைவாயிருக்கிறது? அவர் கும்பகோணம் காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினராயிருப்பதாக ரசீதைக் காட்டும்போது, தஞ்சை ஜில்லாவின் பிரதிநிதியாக காங்கிரஸ் காரியதரிசி ஒப்புக்கொண்டு அவருக்கு பிரதிநிதி டிக்கட் வாங்கிக் கொடுத்திருக்கும்போது அதைப் பொய் டிக்கட் என்று ஒரு அகில காங்கிரஸ் காரியதரிசி சொல்லுவதென்றால், இதைவிட அக்கிரமமான நடத்தை எங்காவது உண்டா? அகில இந்திய காங்கிரஸ் காரியதரிசியும், அகில இந்திய காங்கிரஸின் தலைவருமே இம்மாதிரி பகிரங்கமாய்ச் செய்ய ஆரம்பித்துவிட்டால் காங்கிரஸின் தற்கால யோக்கியதையைப் பற்றி என்னென்று சொல்லுவது?

பிராமணரல்லாதார்.

நியாய புத்தியுள்ள பிராமணர் பலர் நேற்று நடந்த அக்கிரமத்தைப் பலமாய்க் கண்டித்ததை நான் பார்க்கும்போது கொஞ்சம் திருப்தியுண்டாகிறது. நேற்று நடந்த சம்பவம் பல ஐயங்கார் பக்தர்களையும் பிராமணரல்லாதார் என்ற உணர்ச்சி கொள்ளுமாறு தூண்டிவிட்டதைக் கண்டுதான் நான் அதிகத் திருப்தியடைகிறேன். ஐயங்கார் கோஷ்டியாரை இதுவரை ஆதரித்துப்பேசின பலர் நேற்று நடந்த செய்கையால் பிராமணரல்லாதார் கட்சி அவசியமென்பதை உணர்ந்து திரும்பிவிட்டார்கள். மேடைமீதிருந்த சில பிராமணரல்லாதாருக்கு உணர்ச்சியற்றுப் போயிருந்ததேயொழிய மற்றப்படி எல்லா பிராமணரல்லாதாருக்கும் நேற்றையச் சம்பவம் ஒரு படிப்பினை கொடுத்திருக்கிறது. நான் பார்த்த ஒவ்வொரு பிராமணரல்லாதாரின் முகத்திலும் சத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் கொட்டகையில் "உண்மை தெரியாமல் போய்விட்டதே" என்று சொல்லிப் பெருமூச்சு விடுகிறார்கள். சென்னையிலுள்ள பிராமணரல்லாதார் அனைவருக்கும் தற்சமயம் இந்தப் புதிய அவமானம் மனதை வாட்டிக் கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் இதே பேச்சுத்தான். சென்ற வாரம் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடந்த சம்பவமும், நேற்று கோகலே ஹாலில் நடந்த சம்பவமும், பிராமணரல்லாதாரின் கண்களைத் திறக்கவே ஏற்பட்டிருக்கின்றன வென்று நினைக்கிறேன். பிராமணத் தலைவர்கள் அட்டகாசஞ் செய்தும், சுமார் 20 கூலித் தொண்டர்கள் அப்புறப்படுத்த முயன்றும், ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை தனியாக நின்று இவ்வளவு பேரையும் விரட்டியடித்த வீரச் செய்கை பாராட்டத் தக்கது. அவருடைய துணிகரமும், கபடமின்மையுமே நேற்று அவரைக் காப்பாற்றியது. வேறொருவராயிருந்தால் நேற்று நடந்த அமளியில் உருப்படியே தெரியாமல் செய்திருப்பார்கள். அவருடைய வீரச் செய்கையைப் பாராட்டாத பிராமணரல்லாதார் கிடையாது. மகாநாடு இரவு 10 மணிக்கு முடிகிறவரையில் கூட்டங் கூட்டமாக ஜனங்கள் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளைக்கு உதவி செய்வதற்காக கோகலே ஹாலுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். கடைசி வரையில் தம்முடைய உரிமையைத் தீரத்துடன் நிலை நாட்டிய ஸ்ரீமான் பிள்ளையைப் போற்றுகிறேன். பிராமணரல்லாதார் அனைவரும் அவருடைய செய்கையால் பெருமை யடைவார்களென்பது நிச்சயம்.

சென்னை தொழிலாளர் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் ஜி. செல்வபதி செட்டியார் எழுதுகிறார்:—

மகாநாட்டிற்கென உள்ளூர், வெளியூர்களிலிருந்து ஏராளமான காங்கிரஸ் சுயராஜ்ஜியக் கட்சியின் பிரமுகர்கள் வீற்றிருந்த காட்சி வருணிக்கற்பாலது. தேசபக்தர்கள் ஒருவர்பின் ஒருவராகக் கிராம நிர்மாணத் திட்டத்தைப்பற்றியும் பிறவற்றைப் பற்றியும் தீர்மானங்களைப் பிரேரேபிப்பதும் ஆமோதிப்பதுமாக இருந்த நல்ல சமயத்தில் ஏதோ இரண்டொரு காங்கிரஸ் வாலண்டியர்கள் ஸ்ரீமான் பிள்ளை அவர்களிடம் சென்று அவருடைய பிரதிநிதிச் சீட்டைக் காட்டும்படி கேட்டதும் அதன்மீது பிள்ளை அவர்களுக்கும் வாலண்டியர்களுக்கும் ஏதோ வாக்குவாதம் நடந்து கொண்டிருக்கையில், சில வாலண்டியர்கள் அவரை வெளியில் தள்ளுவதற்காக அவரை இழுக்க ஆரம்பித்தார்கள். அச்சமயம் அவர்களுக்குள் கை கலந்ததாகவும் தெரிகிறது. அதற்குள் அம்மேடையிலிருந்த பலர் எழுந்து கூட்டமாகச் சேர்ந்துவிட்டார்கள். சுமார் 50, 60-பேருக்கு மத்தியில் இங்கும் அங்கும் பிள்ளையவர்கள் இழுக்கப்படும்போது என் மனம் தாங்காமல் இங்கும் அங்கும் அவரை மீட்க வழி உளதோ என பலவிதத்தும் முயற்சி செய்தேன். எனினும் என்னால் எவ்வித உதவியும் அவருக்குச் செய்ய முடியாமற் போய்விட்டது. அச்சமயம் கூட்டம் ஒரே கூச்சலுடனும், குழப்பத்துடனும் இருந்ததுடன் பிள்ளை அவர்களின் விரோதிகள் அவரை அதே சமயத்தில் வெளியேற்றி பலமாகத் தாக்க முயற்சி நடப்பதாக என்னிடம் சிலர் வந்து புகார் சொன்னார்கள். அம்முயற்சி செய்பவர்களுக்கு என்னாலான சமாதானத்தை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கையில், வேறொரு காங்கிரஸ் வாதி நன்றாக உதை கொடுத்திருக்க வேண்டுமென்று சொல்வதையும், பலபடப் பேசுவதையும் கேட்டுக் கொண்டிருக்கும்போது, பிரபல தேசபக்தர்கள் ஜனநாயகக் கட்சியை ஸ்தாபிக்க பகீரத முயற்சி செய்து வருபவர்களாகிய இரண்டொரு தலைவர்கள் தங்களுக்குள்ள பொறுப்பையும் மறந்து தாங்கள் வீற்றிருக்கும் மேடையின் கௌரவத்தையும் மறந்தவர்களாகி தண்டபாணி பிள்ளை வாலண்டியர்களைப் போக்கிரிகள் என்று சொன்னார். அவர் அவ்வார்த்தையை வாபஸ் பெற வேண்டுமெனவும் அவர் வெளியேற வேண்டுமெனவும் மேடை மீது நின்று கர்ஜனை செய்தனர். வேறொரு தலைவர் அவர் பெற்றிருக்கும் பிரதிநிதிச் சீட்டு செல்லத்தக்கதல்லவென்று பரிகசித்துப் பேசினார். இச்சம்பவங்களைக் கண்டநான் தண்டபாணி பிள்ளையின் உயிர் தப்புமோ அல்லது இன்றோடு மனைவி மக்களைவிட்டு பரலோகப் பிராப்தி யடைந்துவிடுவரோ என்று எனக்குள் பெரிதும் ஏக்கமுற்றேன். ஏதோ தெய்வகதியாக உயிர்ப் பிச்சை பெற்றார். 1916ம் வருடம் சென்னையில் அதிதீவிரமாக நடைபெற்ற சுயராஜ்யக் கட்சிக் கிளர்ச்சியில் விசேஷ ஊக்கத்தோடு ஊழியம் செய்தவரும் சென்னையில் தொழிலாளர் கிளர்ச்சி பலமாக ஏற்பட்டபோது பலநாள் பக்தி விஸ்வாசத்துடன் அழகிய பிரசங்கங்கள் செய்து தொழிலாளரை மகிழ்வித்தவரும், மகாத்மாவின் கொள்கைப்படி ஒத்துழையா இயக்கத்தில் ஈடுபட்டு சுமார் ஒன்றரை வருஷத்திற்குமேல் கடின காவலில் இருந்தவருமான ஒருவர் ஏதோ தன் மனமாற்றத்தால் ஜாதிய வித்தியாசங்களில் கலந்து கொண்ட பாவத்திற்காக அவருடன் சிறைக்குச் சென்ற தேசபக்தர்களும் அவரைச் சிறை செல்லும் வரையில் உற்சாக மூட்டி கைகொட்டி மகிழ்வித்தவர்களே இன்று அவரை துன்புறுத்தித் தொலைத்துவிடப் பலமாக முழு முயற்சி செய்து விட்டார்களெனின் நம் பாரதநாடு எப்பொழுது முன்னேற்றமடையும் என்பதை அறிய முடியவில்லை. இதனால் ஸ்ரீமான் பிள்ளையவர்களின் ஜாதிய வித்தியாசக் கொள்கைக்கும் எனக்கும் ஒற்றுமையிருப்பதாக எவரும் எண்ணிவிடக்கூடாது. என்னைப் பொறுத்தமட்டில் ஜாதி, மதம் என்ற பேதங்களின்றி சர்வஜன சகோதர பாவம் எப்பொழுதும் நிலைபெற வேண்டுமென பேராவுடையவன் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்வதுடன் தேசபக்தர்கள் இவ்வாறு கோபத்துக்கு ஆளாக தங்களை மறந்துவிட்டதை எடுத்துக் காட்டாமலிருக்க முடியவில்லை என்பதை அறிவித்துக் கொள்ளுகிறேன். எவரெவர் இவ்வாறு அவரைத் துன்புறுத்தினார்களென அறிய வாசகர் ஆவல் கொள்ளலாமெனினும் அவர்களுடைய பெயர்களை எழுதி அவர்கள் மனதில் வருத்தப்படவோ வெட்கப்படவோ செய்வது என்னுடைய கொள்கையல்லவாதலால் அவர்கள் பெயரைச் சொல்ல என் மனம் இசையவில்லை. எல்லாம் வல்ல இறைவன் இவ்வேற்றுமையை ஒழிப்பாராக.

"சுகோதயம்" ஆசிரியர் ஆரணி ஸ்ரீ வி. என். ரங்கசாமி ஐயங்கார் எழுதுகிறார்:—

5-12-26 தமிழ் மகாநாட்டின் நடவடிக்கைகள் ஆரம்பித்து, கிராம நிருமாண வேலைகளைப்பற்றிய தீர்மானத்தைக் குறித்து ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியார் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, ஒரு விசனகரமான சம்பவம் நடைபெற்றதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். தமிழ் மகாநாட்டு நடவடிக்கைகளை 4—12—26உ கவனிக்க ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையவர்கள் வந்தபொழுது, பொதுவாய் காங்கிரஸ் வாதிகளும் சிறப்பாய் இரண்டொரு சுயராஜ்யக்

ஆட்சி சட்ட சபை அங்கத்தினர்களும் அவரிடத்தில் குரோத புத்திகொண்டு, அவரைப் பரிகசித்து, பல வழிகளில் அவமானப் படுத்த எண்ணியிருந்ததாக இப்பொழுது ஏற்படுகிறது. காரணம் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை சுயராஜ்யக் கட்சியாருக்கு எதிரிடையாயும் ஜஸ்டிஸ் கட்சிக்குச் சாதகமாயும் சட்ட சபைத் தேர்தலில் பிரசாரஞ் செய்ததுதான் என்று சொல்லப்பட்டது. ஆனால் நல்ல வேளையாக நேற்று யாதொரு குழப்பமும் பலாத்காரமும் நடைபெறவில்லை. ஆனால் இன்றையத்தினம் மிகவும் அவமானமான முறையால் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை தொண்டர் எனப்படுவோராலும் மற்றவர்களாலும் வலிய இழுத்து தூக்கப்பட்டு மகாநாட்டின் மேடைமீதிருந்து கீழே தள்ள முயற்சி செய்யப்பட்டதை நான் மிகவும் அழுத்தமாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அஹிம்சா தர்மம் ஆட்சி செலுத்த வேண்டிய மகாநாட்டின் மேடையின் மேல், எதிர்க் கட்சியைச் சேர்ந்ததாகக் கருதப்பட்டு வெறுக்கப்பட்ட ஒரு தனி மனிதரை பலாத்கார முறையில் தலைவர்கள் முன்னிலையில் தாக்கப்பட்டது காங்கிரஸ் மேடையின் கண்ணியத்தைக் கண்டிப்பாய்க் குறைத்துவிட்டது. ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை "போக்கிரிகள் சிலர் என்னை இம் மேடையின் மீது உட்காரவிடாமல் தடுக்கிறார்" என்று அக்ராசனரிடம் முறையிட்டார். "போக்கிரிகள்" என்ற பதம் வந்ததும் தொண்டர்களும், பிரதிநிதிகளும் ஸ்ரீமான்கள் எஸ். சத்தியமூர்த்தி, குழந்தை முதலியவர்களும் பொறுமையையும் தன்னடக்கத்தையும் இழந்து, "அவனை வெளியே தள்ளுங்கள்." என்று பல்வேறு வசை மொழிகளைப் பிரயோகித்தார்கள். எதிர் கட்சியைச் சேர்ந்த ஒருவரை இவ்வாறு மகாநாட்டில் நடத்தப்பட்டது. தற்பொழுது மகாநாட்டை நடத்தி வைத்தவர்கள் எதிர் கட்சிகளைச் சேர்ந்த அரசியல் வாதிகளிடத்தில் எவ்வளவு குரோத புத்தியைக் காட்டுகிறார்கள் என்பதைப்புலனாக்குகிறது. ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை செய்தது முழுதும் தப்பு என்று வாதிப்பவர்களும் கூட அவர் மேல் பலாத்காரம் உபயோகித்ததை ஆதரிக்க முடியாது. அவர் பிரதிநிதி டிக்கட்டை வைத்திருந்தும் அவர் பிரதிநிதியல்லவென்று ஸ்ரீ ஏ. ரங்கசாமி ஐயங்கார் சொன்னது பெரிய தவறு. கூட்டத்தில் அக்கிராசனர் ஸ்ரீமான் கே. வி. ரங்கசாமி ஐயங்கார் நடுநிலை நின்று நிதான புத்தியோடு நடந்துகொண்டதை நான் பாராட்டுகிறேன்.

ஸ்ரீமான் ஆர். நடேசன் பி. ஏ. பி. எல். எழுதுகிறார்.

காங்கிரஸை நடத்துவோர்கள் என்று சொல்லிக் கொள்ளுவோர்கள், ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை மீது பலாத்காரத்தை உபயோகித்ததைப் பார்க்கும்போது, யார் மனம்தான் நோகாமல் இருக்கும். ஸ்ரீமான் பிள்ளை டிக்கட் பெற்றுக்கொண்டுதான் வந்திருந்தார். அப்படியிருந்தும் அவரை அப்புறப்படுத்த முயற்சி செய்யப்பட்டதானது, நமது மாகாணத்தில் ராஜீய வாழ்வு எவ்வளவு கேவலமாய் போய்விட்டது என்பதையே காட்டுகிறது. அக்கிராசனர் ஸ்ரீ கே. வி. ரங்கசாமி ஐயங்கார் நேற்று புத்திசாலித்தனமாக நடந்து கொண்டிருக்கா விட்டால் நிலைமை வெகு மோசமாய் போயிருக்கும். இந்த சம்பவத்தை சமாதானமாய் மறக்கும்படி ஏற்பாடு செய்யாவிட்டால், ஏற்கனவே வளர்ந்து கொண்டிருக்கும் சமூகத் துவேஷம் அதிகமாய்ப் போய்விடுமென்று வருந்துகிறேன்.

## நாகை தொழிலாளரின் கண்டனம்.

மகாநாட்டுக்கு நாகையிலிருந்து வந்திருந்த ரயில்வே தொழிலாளர் சங்க நிர்வாக சபை அங்கத்தினரும் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினருமான சீமான் ஜே. மாணிக்கதாஸும் மேற்படி சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீமான்கள் சி. சுப்பிரமணிய பிள்ளை, எஸ். லக்ஷ்மண நாயுடு ஆகியவர்களும் நேற்று கோகலே ஹாலில் நடந்த அக்கிரமத்தைக்கண்டித்து நமக்கு எழுதுவதாவது:—

காங்கிரஸ்காரரின் கொள்கை அஹிம்சா தர்மம். ஆனால் நேற்று கோகலே ஹாலில் நடந்த சுயராஜ்யக் கட்சியாரின் பலாத்காரச் செயல்களைப் பார்த்தவுடன் அஹிம்சா தர்மத்திற்கும் ஐயங்கார் கோஷ்டியாருக்கும் வெகுதூரம் என்பதை உணர்ந்துகொண்டோம். ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளை பிரதிநிதி டிக்கட் வைத்துக்கொண்டே மகாநாட்டிற்கு வந்தார். அந்த டிக்கட் செல்லாதென்றால் முறைப்படி விசாரித்து அறிந்து சொல்லியிருக்கவேண்டும். காங்கிரஸ் காரியதரிசி அவருக்காக அதிகாரப்பத்திரத்தில் கையெழுத்து போட்டு டிக்கட் வாங்கிக்கொடுத்திருக்கிறார். ரிஜிஸ்தரிலும் அவர் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு ஆதாரத்துடன் அவர் டிக்கட் வைத்திருக்கும்போது அது பொய்யானதென்று சொல்லி அவரை அவமரியாதையாக நடத்தத் துணிந்தது அக்கிரமமேயாகும். இதில் சம்பந்தப்பட்ட எல்லாரையும் நாங்கள் பலமாய் கண்டிக்கிறோம். தலைவர்களென்று சொல்லப்படுபவர்களும், குட்டித் தலைவர்களும், தொண்டர்கள் என்ற பெயருடன் இருந்தவர்களும் நேற்று நடந்துகொண்டது வெட்கக்கேடானது. இந்த சம்பவம் பிராமணரல்லாதாருக்கு காங்கிரஸில் எவ்வளவு மதிப்பிருக்கிறதென்பதையே காட்டுகிறது. கொஞ்சமாவது பிராமணரல்லாதாருக்கு சுயமதிப்பு இருக்குமானால் நேற்று நடந்த பலாத்காரச் செய்கையைப்பார்த்தபின்பு இனியும் தூங்கிக்கொண்டிருக்கக்கூடாது. ஸ்ரீமான் பிள்ளையை உள்ளூர் ரயில்வே தொழிலாளர் தாக்க முயற்சிக்க நாகை ரயில்வே தொழிலாளர்கள் தடுக்க முயன்றார்கள். அச்சமயம் எங்களை அவர்கள் அடிக்க வந்தது வருந்தத் தக்கது. சென்னை தொழிலாளர்களே! நாம் சகோதரர்கள். என்றைக்கும் நாம் குடும்பம் மாதிரி. நமக்குள்ளாகவே சண்டை போட்டுக்கொள்ள எதிரிகள் செய்யும் சூழ்ச்சியில் அகப்பட்டுக்கொள்ளாதீர்கள். பிராமணரல்லாதார் என்ற உணர்ச்சி உங்கட்கு தோன்றுமாறு கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

---

# ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையின் கடிதம்.

## உண்மையாய் அங்கு நடந்த விஷயம்

ஸ்ரீமான் N. தண்டபாணி பிள்ளை எழுதுகிறார்:—

### முதல் நாள் நடவடிக்கை.

நான் 4-12-26 சனிக்கிழமை இராயப்பேட்டை சென்று ஸ்ரீ திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரைக்கண்டு "நவ சக்தி" ஆபிசில் பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஸ்ரீமான் முதலியார் தாம் எக்கட்சியிலும் சேராமலும், ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை டில்லி சட்ட சபைக்கு அனுப்பும்படி சிபார்சு செய்தும், எலெக்ஷன் முடிந்ததும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் "ஸ்ரீமான் முதலியார் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து எதிர்ப்பிரசாரம் செய்தும் சுயராஜ்யக் கட்சியார் வெற்றி அடைந்ததாக"க் கூறிய பொய்க்கூற்றை நாளதுவரை தம் உதவியால் வெற்றியடைந்த தலைவர் சீனிவாசய்யங்கார் மறுக்கவில்லையென்றும், இதைப்பற்றி, பிராமணப் பத்திரிகைகளும் சும்மாயிருந்தனவென்றும் வெறுப்புடன் கூறி, தாம் இராஜீய உலகத்தில் இனி தலையிடப்போவதில்லையென்றும், இன்று கோகலே ஹாலில் கூடப் போகும் மாகாண மகாநாட்டிற்கு தாம் வரப்போவதில்லையென்றும் சொன்னார். அதற்கு "டாக்டர் நாயுடு அவர்களும் ஸ்ரீ இராமசாமி நாயக்கர் அவர்களுங்கூட வரமாட்டார்கள் போலிருக்கிறது; நான் மட்டும் போய்வர உத்தேசங் கொண்டிருக்கிறேன்" என்று பதில் சொன்னேன்.

அச்சமயம் அங்கு ஸ்ரீமான் முதலியாரின் விருந்தினராய் வீற்றிருந்த ஸ்ரீமான் டி. எஸ். இராமபத்திர உடையாரும் தஞ்சை தாலூகா ஜில்லா காங்கிரஸ் காரியதரிசி பி. எஸ். வெங்கடகிருஷ்ண பிள்ளையும் என்னை மகாநாட்டிற்கு வரும்படி அழைத்தார்கள். நான் கும்பகோணம் காங்கிரஸ் கமிட்டியில் 1926-ல் ஆகஸ்டு மாதம் 23-௳ 4 அணா சந்தா செலுத்தி 15223 நெ. ரசீதையும் பெற்று மெம்பராயிருக்கின்றேன். மாகாண கமிட்டிக்கு நான் ஒரு மெம்பராகவும் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக கும்பகோணம் காரியதரிசி ஸ்ரீ பாப்பு சாயபு எனக்கெழுதியிருக்கின்றார் என்று சொன்னேன். உடனே ஸ்ரீமான் வெங்கிடகிருஷ்ண பிள்ளை ஒரு அதிகாரப் பத்திரத்தில் பிரதிநிதியாக என் பெயரையும் எழுதி தானும் கையெழுத்திட்டுக் கொடுத்தார். பாப்பங்குளம் ஸ்ரீமான் சொக்கலிங்கம் பிள்ளைக்கும் ஒரு பாரம் வேண்டுமென்று கேட்டேன். அவருடைய பெயரையும் ஒரு பாரத்தில் எழுதி கையெழுத்திட்டுக் கொடுத்தார். அவர் கையெழுத்திட்டுக் கொடுக்கும்போது ஸ்ரீமான்கள் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரும் திரு. வி. உலகநாத முதலியாரும், டி. எஸ். இராமபத்திர உடையாரும் நேரில் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பின்னர் நான் பிராட்வே நெ. 31-ல் இறங்கியிருக்கும் ஸ்ரீமான் சி. எஸ். சாமிநாத செட்டியாரிடம் என்னுடைய அதிகாரப் பத்திரத்தையும் பிரதிநிதி கட்டணம் ரூ. 2ம் கொடுத்து டிக்கட் பெற்று வைத்திருக்கிறே

(11-ம் பக்கம் பார்க்க.)

## வகுப்பு வாதம் ஒழிந்ததா? அல்லது முன்னிலும் அதிகபலம் பெற்றதா?

அது

பார்ப்பனரிடம் இருக்கிறதா? அல்லது பார்ப்பனரல்லாதாரிடம் இருக்கிறதா?

---

இவ்வாண்டு நடந்த சட்டசபைத் தேர்தல்மூலம் பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகமே கண்ணை மூடிக்கொள்ளும் என்று நினைத்து பேசுவதுபோல் நமது பார்ப்பனர்கள் வகுப்பு வாதம் ஒழிந்தது என்று கத்திக்கொண்டு வேஷப் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் தேர்தல் வகுப்புவாதத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டே நேரிடையாகவும் மறைமுகமாகவும் சூழ்ச்சியாகவும் நடைபெற்று வந்திருக்கிறது என்பதைப் பொது ஜனங்கள் அறியமாட்டார்களென்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதாவது இந்தியா சட்டசபைக்கு சென்னை நகரத்தொகுதிக்கு ஒரு ஸ்தானம் உண்டு. அந்த ஒரு ஸ்தானத்திற்கு மூன்று தடவையும் பார்ப்பனர்களே வெற்றிபெற்றிருக்கிறார்கள். மற்ற 23 ஜில்லாக்களுக்கு 9 ஸ்தானங்கள் உண்டு. இந்த 10 ஸ்தானங்களுக்கு 8 பார்ப்பனர் அதில் 6 அய்யங்கார். அதாவது ஸ்ரீமான்கள் 1. ஸ்ரீநிவாசய்யங்கார், 2. எம். கே. ஆச்சாரியார், 3. துரைசாமி அய்யங்கார், 4. ஏ. ரங்கசாமி அய்யங்கார், 5. சேஷய்யங்கார், கே. வி. ரங்கசாமி அய்யங்கார், 7. ஜே. கைய பந்தலு 8. டி. பிரகாசம் பந்துலு ஆகிய எட்டு பார்ப்பனர்களும், 2 பார்ப்பனரல்லாதார் அதாவது ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும் மற்றொரு ஆந்திர தேசத்தார் அவர் பார்ப்பனரா அல்லவா என்பதுகூட தெரியவில்லை.

ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் அவர்களும்கூட பார்ப்பனர்களுக்கு அடிமையாயில்லாதிருந்தால் அந்த ஸ்தானமும் மற்றொரு அய்யங்காருக்கு போயிருக்கும் என்பதே உறுதி. இது வகுப்பு வாதமும், வகுப்பு சலுகையும் வகுப்பு பிரசாரமும் இல்லாமல் பொது நோக்கில் நடந்ததா? அப்படியானால் சென்னை மாகாணமாகிய இந்த 24 ஜில்லாக்களிலும் இந்திய சட்டசபைக்கு யோக்கியதையுள்ள பார்ப்பனரல்லாதார் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்காரை தலைவர் என்று பிரசாரம் செய்த ஸ்ரீமான் கே. ஆர். ஷண்முகம் செட்டியாரைத் தவிர வேறு ஆள் கிடையாதா? இந்த 8 பார்ப்பனர் அய்யங்கார்களைத் தவிர தேசாபிமானமும் தேசபக்தியும் உள்ளவர்கள் இல்லையா? இந்த எட்டு பார்ப்பன அய்யங்கார்களைப்போல் அதாவது ஒரு பார்ப்பனக்குழந்தை ஒருவேளை சாப்பிடுவதை ஒரு பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்துவிட்டால் ஒருமாதம் பட்டினி கிடப்பேன் என்று சொன்ன பார்ப்பனர்களைப்போல் வகுப்பு வித்தியாசமில்லாதவர்கள் இல்லையா? என்றுதான் கேட்கிறோம். ஏறக்குறைய இத்தேர்தல்களில் பார்ப்பனரல்லாதார்கள் வேண்டுமானால் வகுப்பு நலத்தையும் வகுப்பு வாதத்தையும் மறந்திருக்கிறார்களே ஒழிய எந்தப் பார்ப்பனராவது வகுப்பு வாதத்தை விட்டுக்கொடுத்தாரா? ஒவ்வொரு ஊர் தேர்தலிலும் உதாரணமாக திருநெல்வேலி ஜில்லாவில் நாடார் சகோதரர் ஒருவரை சுயராஜ்யக் கட்சியில் சேர்த்துக்கொண்டு ஒரு பார்ப்பனர் வேலை செய்தாரே நாடார்கனவானுக்கு பார்ப்பனர்கள் ஓட்டு செய்தார்களா? ஓட்டுப்பிரசாரம் செய்யும் போதேகூட ஜாயிண்டாக நின்ற பார்ப்பனர், நாடார் அபேக்ஷகரை, பிர்மணாள் வீட்டுக்குள் நீங்கள் வரக்கூடாது என்று வெளியில் நிறுத்திவிட்டு உள்ளே போய் தனக்கு மாத்திரம் தனி ஓட்டு கேட்டுவிட்டு வெளியில் வந்து உங்களுக்கும் போடுவதாய் ஒப்புக்கொண்டார்கள் என்று சொல்லி ஏமாற்றினார்கள். கடைசியாக முடிவு பார்க்கும்போது பார்ப்பனர் ஓட்டுகள் மாத்திரம் பார்ப்பனருக்கும், நாடார் ஓட்டுகள் மாத்திரம் நாடாருக்கும் கிடைத்தது; அய்யருக்கு 6000 ஓட்டு, நாடாருக்கு 5000 ஓட்டு இதுதான் வகுப்புவாதம் புதைக்கப்பட்ட தேர்தல்களாம்! மற்ற இடங்களிலும் பார்ப்பனர்கள், பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதார் இரண்டுபேருக்குமாக அதாவது "மீ சொம்மு மா சொம்மு மா சொம்மு மா சொம்மு" உங்கள் சொத்து எங்களுடையது எங்கள் சொத்து எங்களுடையது என்கிற மாதிரியாக நடந்திருக்கிறது. இதிலிருந்து வகுப்பு உணர்ச்சி யாரிடம் இருக்கிறது? இனி யாருக்கு ஏற்பட வேண்டும் என்பதையும் அது ஒழிய வேண்டுமானால் முதலில் யாரிடம் அது ஒழிய வேண்டும் என்பதையும் யோசித்தால் விளங்காமல் போகாது. அதோடு வகுப்புவாதம் கூடாதென்று பேசும் சில நாடார் வாலிபர்களையும், ஜஸ்டிஸ் கட்சியார் என்று சொல்லும் பார்ப்பனரல்லாதாரிடம் வகுப்பு வாதம் காரியத்திலிருக்கிறதா? சுயராஜ்யக் கட்சியார் என்று சொல்லும் பார்ப்பனர்களிடம் வகுப்பு வாதம் காரியத்திலிருக்கிறதா? என்பதையும் 'வகுப்புவாரி பிரதிநிதித்வம் இருந்தால் தேசத்தின் பேரால் ஸ்தானம் பெறாமல், சர்க்கார் தயவில் ஸ்தானம் பெற நேரிடுமா? என்பதையும் யோசித்துப் பார்த்து நடு நிலைமையில் இருந்து உண்மை அறிய வேண்டுகிறோம்.

---

## கோவையில் தோட்டக் கச்சேரி

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஏகாதிபத்திய பார்லிமெண்டு மஹாநாட்டுக்கு இந்திய பிரதிநிதியாகச்சென்று வந்த ஸ்ரீமான் ஆர். கே. சண்முகம் செட்டியாரவர்களுக்கு கோயமுத்தூர் நகரப் பொது ஜனங்களின் சார்பாக 8—12—26 தேதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு சோமவிலாச பங்களாவில் ஸ்ரீமான்கள் திவான்பகதூர் சோமசுந்தரம் செட்டியார், எம் சம்பந்தம் முதலியார் பி. ஏ. பி. எல், ராவ்சாகிப் எம். வேணுகோபால் பிள்ளை பி.ஏ.பி.எல், ராவ்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் எம். எல். சி, பி. எஸ். ஜி. வெங்கடசாமி நாயுடு, பி. எஸ். சாத்தப்பசெட்டியார், வி. எஸ். செங்கோட்டையா முதலியார், பி. இரத்தினசபாபதி கவுண்டர், வி. வெள்ளியங்கிரி செட்டியார், கே. கணபதி ஐயர் பி.ஏ.பி.எல். ஏ. டி லட்சுமணசாமி முதலியார், கான்பகதூர் ஏ. குலாம் ஹுஸேன்சாஹிப் முதலிய பிரமுகர்களால் ஒரு தோட்டக்கச்சேரி வெகு சிறப்பாக நடைபெற்றது.

## பனகாலிடம்

### இவ்வளவு துவேஷ மேன்?

பனக்கால் அரசரிடம் நமது பார்ப்பனர் ஐகோர்ட் ஜட்ஜி நிர்வாகசபைமெம்பர் முதல் புரோகிதம், பஞ்சாங்கம், தூது, காப்பிக்கடை எச்சில் எடுக்கும் பார்ப்பான்வரையில் பனக்கால் புதைக்கப்படவேண்டுமென்கிற அளவு துவேஷமிருக்கக் காரணம் என்ன? பஞ்சாப் பில் ஜனரல் டயர் செய்த காரியத்தையும் லார்டு செம்ஸ் போர்ட் செய்த காரியத்தையும் கூட ஆதரித்து உத்தியோகம் பெற்ற பார்ப்பனர்களுக்கு பனகாலிடம் இவ்வளவு ஆத்திரமேன்? பனகால் ஆதிக்கத்தில் ஸ்ரீமான்கள் சி. வி. வெங்கிட்டரமணய்யங்காருக்கும் டி. எம். நரசிம்மாச்சாருலுக்கும் இன்னம் எத்தனையோ பார்ப்பனருக்கும் கௌரவ உத்தியோகங்களும் சம்பள உத்தியோகங்களும் கொடுத்திருந்தும் இவ்வளவு ஆத்திரமேன்? அவர் என்ன செய்தார் என்று யோசித்துப் பார்த்தால் பார்ப்பனர்களின் ஆத்திரத்திற்கு காரணம் இல்லாமல் போகாது. அது என்ன என்றால் பார்ப்பனரல்லாதார் நன்மைக்காக பாடுபட்டதுதான். அல்லாமல் வேறு என்ன அதில் இருக்கிறது. அப்படி இல்லையானால் பனகால் ஒழிந்து வேறு யார் வந்தாலும் சரி என்று ஷை பார்ப்பன அதிகாரிகள் முதல் எல்லோரும் சொல்வானேன்? இதிலிருந்தே பார்ப்பனரல்லாதார் நன்மையை நாடக்கூடியவர்களில் தலைசிறந்து விளங்குபவர் பனகால்தான் என்று பார்ப்பனர்கள் நினைக்கிறார்கள் என்று தெரிகிறதா இல்லையா?

### விணுக்கள்.

5—12—26 ௳ "குடி அரசு" பத்திரிகையில் "சங்கராசாரியனர் கோவிலுக்குள் சக்கசும் மிதியடியும்" என்ற தலைப்பின்கீழ் மனத்துணிவுடன் எழுதிய அன்பார்ந்த வியாசத்தை பார்வையிட்டேன்:

வோக குருவென்றால் அர்த்தமென்ன?

சங்கரரென்பவர் யார்?

சங்கருக்கு சந்ததியுண்டா?

நமது பரதகண்டத்தில் நம்பிக்கையாக கொண்டாடும் குருவம்சம் யாது?

நமது மூதாதைகள் லோக குருவை கொண்டாடி வந்தார்களா?

தயவுசெய்து மறு "குடிஅரசு" பேப்பரி பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்


K. S. குளத்துவய்யர், கண்டி,
சிலோன் ராஜவீதிநெ. 62.

### திருப்பூர்.

திருப்பூர் முனிசிபாலிட்டியார், ஏகாதிபத்திய பார்லிமெண்டு மஹாநாட்டுக்கு இந்திய பிரதிநிதியாகச்சென்று வெற்றியுடன் திரும்பிய கோவை ஸ்ரீமான் ஆர். கே. சண்முகம் செட்டியாரவர்களுக்கு 12—12—26 தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5½ மணிக்கு முனிசிபல் கட்டிடத்தில் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுப்பார்கள்:

* * *

திருப்பூரில் ஸ்ரீமான் செட்டியாரவர்களுக்கு 12-12-26 தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு மங்களவிலாச ஹாலில் ஸ்ரீமான்கள் கே. என். ராமசாமிக்கவுண்டர், என். துரைசாமிக் கவுண்டர், எம். என். சிக்கண்ண செட்டியார் ஆகிய மூன்று கனவான்களும் ஒரு டின்னர் பார்ட்டி நடத்துவார்கள்



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

அக்ஷய-ஹு கார்த்திகை-மீ 27-உ.

## பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

சென்ற வாரம் "குடியரசு" தலையங்கத்தில், இனி என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி எழுதி இருந்தோம். அதுபோலவே ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் இம்மாதக் கடைசி வாரத்தில் மதுரையில், ஒரு பார்ப்பனரல்லாதார் மகா நாடு கூட்டப் போவதாக அறிந்து சந்தோஷமடைகிறோம். கூட்டுவதில் காங்கிரஸ் மகாநாடுகள் என்ற பெயரால் பார்ப்பனர்கள் கூட்டம் கூடி பொது மக்களை ஏமாற்றி தங்கள் வகுப்பார் ஸ்தல ஸ்தாபனங்களிலும் சட்ட சபைகளிலும் ஸ்தானம் பெற சூழ்ச்சிகள் செய்வது போலவும் சர்க்கார் உத்தியோகம் பெற தந்திரங்கள் செய்வது போலவும் இல்லாமல் நாட்டிற்கும், சிறப்பாக பார்ப்பனரல்லாதார்களுக்கும் உண்மையான நன்மைகள் ஏற்படும்படியாகவும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை காப்பாற்றப்படும்படியாகவும் ஏற்ற கொள்கைகளை வைத்து, அதற்கான திட்டங்களை வகுத்து, காரியத்தில் நடத்த முயல வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

### தலைவர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன:—

மகாநாட்டுக்கு பலவித ராஜீய அபிப்பிராயமுள்ள பார்ப்பனரல்லாதார்களை எல்லாம் அழைக்கவேண்டும். யார் யாருடைய உண்மையான கூட்டுறவும் ஒத்துழைப்பும் எவ்வளவுக்கெவ்வளவு கிடைக்குமோ அவைகளையெல்லாம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

தலைவர்களாயிருப்பவர்கள் பிரசார வேலைகளை ஆறுமாதகாலத்திற்காவது தொடர்ந்து முறையாக நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

குறைந்தது 5 லக்ஷ ரூபாயிக்கு குறையாமல் பண்டு சேர்க்கவேண்டும்.

தமிழ் நாட்டில் உள்ள பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர்களும், வக்கீல்களும் தங்கள் வரும்படிகளில் ஏதாவது ஒருபாகத்தை மாதா மாதம்கொடுத்துவரும்படியாக ஏற்பாடுசெய்து அவற்றை ஒழுங்காய் வசூலிக்க ஏற்பாடுகளும் செய்யவேண்டும்.

மாதம்தோறும் வரவு செலவுகணக்குகள் வெளியாகவேண்டும்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் தக்க கிராமங்களிலும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை சபைகள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஜில்லாக்கள்தோறும் காரியதரிசியையும் பிரசாரகரையும் நியமித்து நமதுகொள்கைகளைப் பரவச்செய்யவேண்டும்.

தமிழ் தினசரி பத்திரிகையை இன்னமும் கொஞ்சம் பலப்படுத்தி குறைந்தபக்ஷம் 10,000 பிரதிகளாவது தமிழ்நாட்டில் உலாவும்படி செய்யவேண்டும்.

### கொள்கைகளாவன

இந்திய மக்கள் சுயமரியாதையையும் சுயராஜ்யத்தையுமுடைய முக்கிய சாதனமான கதரை ஒவ்வொருவரும் இன்றியமையாத சாதனமாய் கொள்ளவேண்டியதோடு கதரை அணிவது முக்கிய கடமைகளில் ஒன்றாய்க் கொள்ள வேண்டும்.

தீண்டாமையை அடியோடு ஒழிப்பதோடு மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்கிற தத்துவத்தை திரிகரண சுத்தியாய் ஒப்புக்கொள்ளவேண்டும்.

மதுவிலக்கு நாட்டிற்கே அவசியமானாலும் சிறப்பாய் பார்ப்பனரல்லாத மக்களுக்கே மிக மிக அவசியமானபடியால் அதை ஒழிக்கவேண்டியதையும் முக்கிய கடமையாய்க் கொள்ளவேண்டும்.

கோர்ட்டு விவகாரங்களே பார்ப்பனரல்லாத மக்கள் அடிமைத்தன்மைக்கும் குடும்ப அழிவுக்கும் செல்வங்கள் ஒழிவதற்கும் அடிப்படையான ஆதாரமாயிருப்பதால் சகல விவகாரங்களையும் பஞ்சாயத்து மூலமாக பைசல் செய்யவசதி ஏற்படுத்தி கோர்ட்டு விவகாரங்களை ஒழிக்க வழிதேடவேண்டும்.

ஆகிய இக்கொள்கைகளை அடிப்படையாக வைத்து காரியத்தில் கொண்டுவரக்கூடிய அளவுக்கு திட்டங்களை ஏற்படுத்தி பிரசாரவேலை செய்யவேண்டும். இதல்லாமல் உத்தியோகங்களையும், பதவிகளையும் பெறுவது மாத்திரமே பார்ப்பனரல்லாதார் இயக்கங்களின் கொள்கையென்றும், திட்டமென்றும் பிறர் நினைக்கும்படியாகவாவது நடந்துகொண்டால் உத்தியோகத்திற்கும் பதவிக்கும் ஆசைப்பட்டவர்கள்போக மற்றவர்கள் இச்சங்கத்தில் சேரமாட்டார்கள் என்பதையும், பதவிக்கும், உத்தியோகத்துக்கும் ஆசைப்பட்டவர்கள் உள்ள சங்கம் ஒருநாளும் உருப்படாது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நாம் அறிந்தபடி இம்மாதக் கடைசியில் மதுரையில் கூட்டப் போகும் பார்ப்பனரல்லாதார் மகா நாட்டுக்கு (கூடுவதாயிருந்தால்) ஒவ்வொரு ஜில்லா தாலூகா கிராமங்களில் இருந்தும் ஏராளமான கனவான்கள் வரவேண்டும். அசார்சமாயிருக்கக் கூடாது.

## முக்கிய வேண்டுகோள்.

தேவஸ்தான சட்டத்தை ஒழிக்கச் சில பார்ப்பனர்கள் வைசிராயிடம் போயிருப்பதால் ஒவ்வொரு ஊரிலும் உடனே கூட்டம் கூடி தேவஸ்தான சட்டத்தை ஆதரித்து வைசிராயின் கல்கத்தா கேம்புக்கு தந்திகள் அனுப்பவேண்டும். இவ்வாரத்தில் 1,000 தந்திகளாவது அனுப்பப்படவேண்டும்.

சர்க்கார் அதிகாரிகள் கூட வருவதில் யாதொரு ஆக்ஷேபணையும் இராது என்றே நினைக்கிறோம்.. இது ஒரு (குறிப்பிட்ட சமூக) ஜாதிய மகா நாடே அல்லாமல் ராஜீய மகாநாடு அல்ல வென்றே சொல்லுகிறோம். உதாரணமாக பிராமணர் மகாநாடு என்றும் வருணாசிரம தர்ம பரிபாலன மகாநாடுஎன்றும், ஆரிய தர்ம பரிபாலனமகாநாடு என்றும் பல மகா நாடுகள் பார்ப்பனர்கள் கூட்டுவதில் அனேக உத்தியோகஸ்தர்கள் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

அதுபோலவே மற்ற சமூகத்தார் கூட்டும் சமூக மகா நாடுகளிலும் அந்தந்த சமூகத்தார் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆதலால் பார்ப்பனரல்லாதார் மகா நாட்டுக்கு வர யாரும் எந்த உத்தியோகஸ்தர்களும் பயப்பட வேண்டியதில்லை. வீணாக நம் உத்தியோகஸ்தர்கள் பயப்படுவதினாலேயே நமது உத்தியோகஸ்தர்களுக்கு பெரும்பாலும் சுயமரியாதை இல்லாமல் போகக் கூட நேரிடுகிறது. ஆகையால் பெருவாரியான ஜனங்கள் அஜராகி ஒற்றுமைப்பட்டு நடவடிக்கையில் கலந்து நமது சுயமரியாதைக்கும் முற்போக்குக்குமான காரியத்தைச் செய்ய வேண்டுமாய் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம். இதுபோன்ற சமயம் இனி கிடைக்காதுஎன்பதையும் ஞாபக மூட்டுகிறோம்.

## முதன்மந்திரியின் முதற்செய்கை.

கும்பகோணம் தாலூக்கா போர்டின் பிரசிடெண்டு தேர்தலுக்கு தேர்தல் நடத்திவைப்பதற்கென்று தற்கால ஏற்பாடாக ஒரு கனவானை அரசாங்கத்தார் நியமித்திருந்தார்கள். அவர் ஒரு தேதியை தேர்தலுக்கு குறிப்பிட்டிருந்தார். அத்தேதி சௌகரியப்படாததினால் பலர் வேண்டுகோளுக்கிணங்கி தேர்தலை ஒத்திவைத்துவிட்டார். இந்த விஷயம் தெரிந்த பார்ப்பன மெம்பர்கள் பேசாமலிருந்துவிட்டு, திடீரென்று ஒன்றுகூடி, தங்களுக்குக் கீழ்பட்ட இரண்டொரு பார்ப்பனரல்லாத மெம்பர்களை ரகசியமாய் வரவழைத்து ஆபீசு மூடி இருந்த சமயத்தில் வராண்டாவில் கூட்டம் கூடினதாகவும், ஸ்ரீமான் லக்ஷ்மிவராக அய்யங்கார் என்கிற ஒரு பார்ப்பனரை ஏகமனதாய்த் தெரிந்தெடுத்ததாகவும் பத்திரிகைகளுக்கு தந்தி அடித்துவிட்டார்கள். இதின் பயனாய் தின்னை தேர்தல் ஊர்ஜிதப்பட்டு ஸ்ரீமான் லக்ஷ்மிவராக அய்யங்காரை கும்பகோணம் தாலூகா போர்டு தலைவராய் சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்டாய் விட்டது.

# பார்ப்பனர்களின் தலைக் கொழுப்பு.

—————o—————

தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள், தற்காலம் ஐகோர்ட், நிர்வாக சபை முதலிய ஆதிக்கம் உள்ள பதவிகளிலும், மற்றும் அதிகாரமுள்ள பதவிகளிலும், வக்கீல் முதலிய செல்வாக்குள்ள பதவிகளிலும் ஏகபோகமாய் அமர்ந்திருப்பதின் மமதையினாலும், பார்ப்பனரல்லாதாரில் சில பதர்கள், வயிற்றுக் கொடுமையாலும் பேராசையினாலும் சுய மரியாதையற்று பார்ப்பனர்கள் பாதம் வருடித் திரிவதினாலும், வேறு பலவழிகளிலும், பார்ப்பன மாய்கையில் பல உணர்ச்சியற்ற ஜமீன்தார் மிராஸ்தார்முதலியசெல்வவந்த வாலிபர்கள் அவர்களுக்குச் சர்வ சுவாதீனப்பட்டு கிடப்பதாலும், பொதுவாகப் பார்ப்பனரல்லாதார் அறிவீனத்தால் கட்சிப்பிரதி கட்சி விவகார வில்லங்கங்கள் முதலியவைகளினால் பார்ப்பனர்களுக்கு அடிமைப்பட்டு கிடப்பதினாலும், பாமர மக்கள் உண்மை நிலையை அறியாதபடி பார்ப்பனர்கள் செய்யும் சூழ்ச்சிப் பிரசாரங்களாலும் சமீப தேர்தல்களில் பார்ப்பனர்கள் தங்களுக்கு வெற்றி கிடைத்ததாய்ச் சொல்லிக்கொள்ளக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இவ்வெற்றி நிலையை தாங்கமுடியாமல் நமது பார்ப்பனர்கள் தலைக்குக்கொழுப்பேறி தலைகால்தெரியாமல் ஆடுவதை நாம் வரிசையாக பார்த்துவருகிறோம். உதாரணமாக இந்த ஒருமாத காலத்திற்குள் எவ்வளவு அகந்தையும் ஆணவமும் கொண்ட செய்கைகள் பார்ப்பனர்களால் நடத்தப்பட்டிருக்கின்றன என்பதைக் கவனித்தவர்களுக்கு பார்ப்பனர்களின் தலைக் கொழுப்புத் தன்மை விளங்காமல் போகாது.

## கார்பொரேஷன்.

சென்னை கார்பொரேஷனில் கவுன்சிலர்கள் என்கிற பெயர் வைத்துக்கொண்டு கார்பொரேஷனில் நடத்தும் குறும்புத்தனத்திற்கும் அளவேயில்லை. குழந்தைபாதுகாப்புஆஸ்பத்திரிக்குச்சென்று, அங்கு அவ்வாஸ்பத்திரியின் தலைவி இல்லை என்பதை அறிந்தும் அங்குள்ள மருத்துவப் பெண்களிடம் அடாதுடியாய் நடந்துகொண்டதும், அருவருக்கத்தகுந்த கேள்விகள் கேட்டு அப்பெண்களை அவமானப்படுத்தியதும், இவ்வளவும் செய்துவிட்டு பின்னும் அவ்வுதவியற்ற பெண்களை வேலையை விட்டு நீக்கவேண்டுமென்று கொடுமை செய்ததையும் பார்க்கிற போதும், ஸ்ரீமான் கோபதி நாராயணசாமி செட்டியார் என்கிற ஒரு நாயுடு கார்பரேஷன் பிரசிடெண்டாய் வந்துவிட்டாரே என்கிற ஆத்திரத்தினாலும், தாங்கள் ஆட்டுகிறபடி ஆடக்கூடியவர் வரவில்லையே என்கிற ஆத்திரத்தினாலும் கார்பரேஷனில் நடந்துகொள்ளும் யோக்கியதையும் மீன் கடை, கள்ளுக்கடை, குச்சுக்காரவீதி இதுகளில் நடப்பது போன்ற இழிவான வாக்கு வாதங்களும் மானங்கெட்ட வெளியேற்றங்களும் அதிகப் பிரசங்கித் தனங்களும் அளவுக்கு மிஞ்சி நடப்பதும், பத்திரிகைகள் தங்கள்வசம் இருக்கின்றன என்கிற காரணத்தால் நடந்த விஷயங்களை திரித்தும் பொய்களைச் சேர்த்தும் ஜனங்கள் தப்பாய் நம்பும்படியாக பிரசுரித்துவருவதும், மற்றும் காங்கிரஸ் என்னும் பேரால் காலிகளையும் அன்னக்காவடிகளையும், பேராசைக்கார களிமண் தலைகளையும் சேர்த்துக்கொண்டு அவர்களைவிட்டு ஈனத்தனமாய்ப்பார்ப்பனரல்லாத தலைவர்களையும் தொண்டர்களையும் வையும்படி செய்வதும், அடிக்கும்படி செய்வதுமான காரியங்கள் செய்வதும் சகிக்க முடியாததாயுமிருப்பதும் பார்த்து வருகிறோம்.

## ஸ்ரீமான் பக்கிரிசாமி பிள்ளை.

பொது ஜனங்கள் பனகால் ஆட்சியை மறுக்கிறார்களென்று கட்டி விடுவதற்காக பொது ஜனங்கள் பேரால் தங்களிலேயே சில காலிகளைவிட்டு மீட்டிங்கு கூட்டச்செய்து அம்மீட்டிங்குகளில் தாங்களே போய் இருந்துகொண்டு இரணியனைப் போல்



சுயமரியாதை காத்த வீரர்.

தன்னையே தலைவரென்று சொல்லவேண்டுமென்று "ஸ்ரீநிவாசய்யங்காருக்கு ஜே!" என்று சொல்லும்படி கட்டாயப்படுத்தியதும் அப்படிச்சொல்லமறுத்த ஸ்ரீமான் பக்கிரிசாமிஎன்கிற வாலிபரைப் பிடித்துபோக்கிரிகளை விட்டுகடுமையாய் அடிக்கச்செய்ததும அவர் தான் செத்தாலும் சரி யென்று சீனிவாசய்யங்காருக்கு ஜேய் சொல்லாமல் அடிபட்டு ஜனரல் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகப்பட்டதும், தமிழ் மகாநாடு என்கிற பெயரால் கோக்கலே ஹாலில்நடத்தப்பட்ட அய்யங்கார் கூட்டத்திற்குச் சென்றிருந்த ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அவர்களை அடித்து உதைத்து அவமானப்படுத்திவிட்டால் தமிழ் நாட்டிலுள்ள மற்ற பார்ப்பனரல்லாத வாலிபர்களும் பயந்து பார்ப்பனர்களின் அயோக்கியத்தனத்தை வெளியிலெடுத்துச் சொல்லாமலிருக்கச் செய்துவிடலாமென்கிற எண்ணத்தின்பேரில் அவரை இப்பார்ப்பனர்கள் கூலிகளை விட்டு உபத்திரவித்ததைப் பார்க்கும்போதும்சுத்தமான பார்ப்பனரல்லார் ரத்தவோட்டமுள்ள,எந்த மனிதனுடைய ரத்தமும் கொதிக்காமல் இருக்காது.

## ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை.

ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை ஆகஸ்டுமீ 23வ யிலேயே 4 அணா சந்தா கொடுத்து காங்கிரஸ் மெம்பராகச்சேர்ந்து 15,223 நெம்பர் இரசீது வாங்கிஇருக்கிறார். ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை உண்மையான சுயராஜ்யத்திற்கு ஒரு நாளும் எதிரியல்ல. ஆனால் பார்ப்பனர் ஆதிக்கம்தான் சுயராஜ்யம் என்று சொல்லப்படும் சுயராஜ்யத்திற்குத்தான் எதிரியாய் இருக்கிறார். பார்ப்பன ஆதிக்க சுயராஜ்யத்தின்சூழ்ச்சிகளை தாராளமாய்ஜனங்களுக்கு எடுத்துச்சொல்லுகிறார். இதற்காகத்தான் அவரை,பார்ப்பனர்கள்ஒழிக்கப்பார்க்கிறார்கள். அதற்குஅவர்பயப்படுவதில்லை. ஆதலால் தமிழ்நாடு மகாநாட்டிற்கும் ஒரு பிரதிநிதியாய்ப்போகஆசைப்பட்டார். பிரதிநிதி பத்திரம் பெற்றார். பிரதிநிதி கட்டணம் ரூ. 2-ம் செலுத்தினார் காங்கிரஸ் கமிட்டி குமாஸ்தாவிடம் 61 நெ. பிரதிநிதி டிக்கெட்டும் பெற்றார். இதன் பயனாய் தாராளமாய்உள்ளேவிடப்பட்டார். உள்ளே போய் தனது சகாக்களிடம் உட்கார்ந்தார். இதைப்பார்த்த பார்ப்பனர்களுக்கு ஆத்திரம்வந்துவிட்டது. ஏனெனில் காங்கிரஸ் என்பதும் கான்பரன்ஸ்கள் என்பதும் நமது நாட்டுப் பார்ப்பனர்கள், தங்கள் தங்கள் தாய் தகப்பன்மார்கள் தங்களது ஆதிக்கத்திற்கு தேடிவைத்த சொத்துக்களாக நினைத்துக்கொண்டிருப்பதால் தங்கள் குண்டியைத்தாங்கி பூட்டைத் துடைத்து காலைக் கழுவிச் சாப்பிடசம்மதித்த ஆள்களைத் தவிர மற்றவர்கள் உள்ளே வரக்கூடாது என்கிற ஆணவம் அவர்களுக்கு உண்டு. அதனால் ஸ்ரீ தண்டபாணி பிள்ளையைக்கண்டு ஆத்திரப்பட்டது ஆச்சரியமல்ல.

## வெளியாக்க சூழ்ச்சி.

ஆதலால் ஸ்ரீமான் பிள்ளையை வெளியாக்க எண்ணி ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்காரால் பாவலர் என்கிற ஒரு பார்ப்பனரல்லாதாரை ஏவிவிடப்பட்டது. அவர் முதலாவதாக சட்டப்படி ஸ்ரீமான் பிள்ளை உள்ளே வந்தாரா அல்லது சட்ட விரோதமாய் வந்தாரா என்பதை கவனிப்பதற்காக பிரதிநிதி ரிஜிஸ்டரை பரிசோதித்தார்; அதில் 61வது நெம்பர் பிரதிநிதியாக பதிவு செய்யப்பட்டு கட்டணமும் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதின்மேல் ஒன்றும் செய்யமுடியாமல் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளை யோசனை கேட்டார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் ஒரு யுக்தி செய்தார். அதென்னவென்றால் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளைக்கு பிரதிநிதி சீட்டுபெற பிரதிநிதி சர்ட்டிபிகேட் கொடுத்த தஞ்சை காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியான ஸ்ரீமான் வெங்கிடகிருஷ்ண பிள்ளை என்கிற ஒரு பார்ப்பனரல்லாதாரைப்பிடித்து அவ்வுரிமைச்சீட்டை எப்படியாவது ரத்துசெய்வித்து ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையின் டிக்கட்டை மெள்ள ஏமாற்றி வாங்கிக்கொண்டு [illegible] கட்டமல்லாமல் வந்தார் என்கிற பெய[illegible] வெளி

யிலனுப்பிவிட தோது சொல்லிக்கொடுத்தார். ஆனால் ஸ்ரீமான் வெங்கிடகிருஷ்ண பிள்ளை, ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையின் டிக்கட்டைபெற பலவழிகளில் முயன்றும் முடியாததால் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், ஸ்ரீநிவாசய்யங்கார் முதலியவர்கள் வேறு வழியில் ஸ்ரீமான் பிள்ளையை வெளியாக்க யோசனை செய்ய வேண்டியதாய்விட்டது.

மறுநாள் சம்பவம்.

இந்த நிலையில் அன்றைய மகாநாட்டின் விஷயம் முடிந்துவிட்டதால் மகாநாடு கலைக்கப்பட்டுவிட்டது. ஸ்ரீமான் பிள்ளையவர்கள் அதே டிக்கட்டைக்கொண்டு மறுநாள் மகாநாட்டிற்கும் சென்றிருக்கிறார். டிக்கட் பரிசோதகர்கள் ஸ்ரீமான் பிள்ளையின் டிக்கட்டை பரிசோதித்து மறுநாளும் உள்ளேவிட்டிருக்கிறார்கள். அப்படி இருக்க மறுபடியும் முதலாவதாக! ஒரு பார்ப்பன வாலண்டியர் ஸ்ரீமான் பிள்ளையின் பக்கத்தில்போய் அவரை வெளியில் போகும்படி சொல்லச்செய்தார்கள். பிள்ளை மறுத்தார். டிக்கட்டைப் பிடுங்கிக்கொள்ளும் நோக்கத்துடன் டிலிகேட் டிக்கட்டை காட்டும்படி கேட்டார்கள். ஸ்ரீமான் பிள்ளை மடியில் வைத்துக்கொண்டு மற்றவர்களையும் பரிசோதித்தால் நானும் காட்டுவேன் என்றார். பிறகு அவரை மேடை மீது உட்காரக்கூடாது என்று சொன்னார்கள். பிள்ளை அலட்சியமாயிருக்கவே ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், ஸ்ரீனிவாசய்யங்கார், ஆகியவர்கள் ஸ்ரீமான் குழந்தை என்கிற ஒரு பார்ப்பனரல்லாதாரைக் கூப்பிட்டு ஸ்ரீமான் பிள்ளையை வெளியாக்கக் கட்டளை இட்டார்கள். அவர் பல பார்ப்பனத் தொண்டர்களை அழைத்து வந்து ஸ்ரீமான் பிள்ளையை தூக்கச் சொன்னார். தொண்டர்கள் அடியோடு தூக்கவே ஸ்ரீமான் பிள்ளை மேல் கிளம்பிய நிலையில் சபையோர்களைப் பார்த்து சிரித்துக்கொண்டு பேச ஆரம்பித்தார். இந்த சமயதில் ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் தன் கைத் தடியால் குத்தினார். உடனே மற்ற பார்ப்பனர்களும் கிளம்பி இவரை வெளியாக்கும்படி சத்தம் போட்டிருக்கிறார்கள். இவ்வளவு பெயரையும் உதறித் தள்ளிவிட்டு மறுபடியும் கொஞ்சம் முன்னேறி உட்கார்ந்து கொண்டார். இந்த சமயத்தில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் எழுந்து அவனுக்கு இங்கு வேலை இல்லை. வெளியில் பிடித்து தள்ளுங்கள் என்றும், ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் எழுந்து என்னை வைதவனுக்கு இங்கு என்ன வேலை வெளியில் தள்ளுங்கள்: முடியாவிட்டால் இவன் டெலிகேட் அல்லவென்று சொல்லிவிடும் என்று ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்காருக்கு உத்திரவு போடவும், ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்கார் எழுந்து "ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை காங்கிரஸ் மெம்பரும் அல்ல டெலிகேட்டும் அல்ல" என்று விளம்பரம் (டிக்ளேர்) செய்யவும், கூட்டத்தில் இருந்த பார்ப்பனர்கள் "அவனுக்கு (ஸ்ரீமான் பிள்ளைக்கு) ஸ்ரீமான் என்று சொல்லக்கூடாது" என்று கத்தியும் கடைசியாக தங்களால் ஸ்ரீமான் பிள்ளையை வெளியேற்றமுடியாமல் போனதால் ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்கார் எழுந்து "கீழே விழுந்தும் மீசையில் மண்படவில்லை" என்பதுபோல் "ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை மன்னிப்பு கேட்டுக்கொண்டார்" என்று சொல்லி தங்கள் பிகு



கடற்கரையில் அடிபட்ட ஸ்ரீமான் பக்கிரிசாமி பிள்ளை

வைக் காப்பாற்றிக் கொண்டார்கள். பின்னர் அக்கிராசனர் இதை கவனித்து ஸ்ரீமான் பிள்ளையை பக்கத்தில் அழைத்து விபரங்களைக் கேட்டு அவருக்கு அங்கிருக்க உரிமை உண்டென்று தனது பக்கத்தில் உட்காரச்செய்து கொண்டார். இவ்வளவையும் நடக்கும்போது பார்த்திருந்த பார்ப்பனப் பத்திரிகைகள் எல்லாவற்றையும் மறைத்துவிட்டு "தண்டபாணிபிள்ளை திருவிளையாடல்" என்று தலையங்கமிட்டு பொய்யும் புரட்டும் எழுதி இருக்கின்றன.

ஸ்ரீமான் குழந்தையினிடம் அபயம்.

மறுபடியும் ஸ்ரீமான் குழந்தை என்னும் ஒரு பார்ப்பனரல்லாத கிறிஸ்தவர் போரால் பார்ப்பனப் பத்திரிகைகள் ஒரு கவு-தம் பிரசுரித்திருக்கின்றன. இந்த குழந்தைகள் கூட நம்பமுடியாது. என்னவென்றால் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார் ஸ்ரீமான் குழந்தையை அபயமடைந்து அவர் காலுக்குள் புகுந்து "எங்களப்பன் குதிருக்குள் இல்லை" என்பதுபோல் பார்ப்பனர்கள் இச்சம்பவத்திற்கு பொறுப்பாளிகள் அல்ல என்று அவர் பேரால் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

அல்லாமலும் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை ஒழுங்கு முறைப்படி பிறப்பிக்கப்படாத டிக்கட்டுடன் வந்தார் என்றும், தான்தான் அவரைத் தூக்கிச்செல்ல தொண்டர்களை ஏவினதாகவும், அவர் சரியானபடி டிக்கட்டை வைத்துக்கொண்டிருந்தாலும் காங்கிரசுக்கு விரோதி ஆனதாலும், மகாத்மா காந்தியை மோசக்காரர் என்று சொன்னதாலுமே பிள்ளை அங்கு இருக்கக்கூடாதென்று கருதி அம்மாதிரி செய்ததாகவும் வீரமாய் எழுதிவிட்டு இதுபோலவே மற்றவர்களுக்கும் நடக்கும் என்றும் ஒரு ஸ்ரீமான் குழந்தையின் பேரால் எழுதியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் கவனிக்கும்போது பார்ப்பனர்களுக்கு எவ்வளவு தலை கொழுத்திருக்கிறது? பார்ப்பனரல்லாதார்கள் எவ்வளவு சுயமரியாதையற்று இருக்கிறார்கள்? சீர்காழி ஸ்ரீமான் சாமிநாத செட்டியார் தவிர அக்கூட்டத்திலிருந்த பார்ப்பனரல்லாத அம்மாஞ்சிகள் வாயை மூடிக்கொண்டிருந்திருக்கிறார்கள் என்றால் இதற்கு எதை சமாதானமாகச் சொல்லுவது. மானம், வெட்கம், சுயமரியாதை என்பது சிலருக்கு தங்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளை கையைப் பிடித்து இழுப்பதுதான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் போல் தோன்றுகிறது. இச்சம்பவம் இதற்கு சமானம் அல்ல என்று நினைத்து விட்டார்கள் போல் இருக்கிறது. இப்படிப்பட்ட ஜனங்களையுடைய சமூகம் சுயராஜ்யத்திற்கு லாயக்கா என்றுதான் கேட்கிறோம். சுயமரியாதை இல்லாமல் சுயராஜ்யம் சம்பாதிப்பது சுயமரியாதை அற்றவன் கலியாணம் செய்துகொண்டால் அப்பெண்ணின் கதி என்னவோ அதுபோல்தான் முடியும். ஆதலால் பார்ப்பனரல்லாத மக்கள் முதல் முதல் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள முயலவேண்டும். அதிலேயே சுயராஜ்யமிருக்கிறது. ஆதலால் பார்ப்பனர்களுக்கு, குலாமாகவும் கால்வருடிகளாகவும் இருந்து வயிறு வளர்ப்பதைவிட மானக்கேடானதும் சுயமரியாதையற்றதுமான காரியம் உலகில் வேறொன்றுமில்லை என்பதாக உணர்ந்து ஒவ்வொருவரும் பார்ப்பனரல்லாத சுயமரியாதைச் சங்கத்தை ஆதரித்து முதலில் சுயமரியாதையை அடைவார்களாக.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

படி சொல்லிவிட்டு சாப்பிடப் போய்விட்டேன். ஸ்ரீமான் சொக்கலிங்கம் பிள்ளையும் தம்முடைய அதிகாரப் பத்திரத்தையும் ஒரு 2-ம் மேற்படி செட்டியாரவர்களிடமே கொடுத்து டிக்கட் பெற்று வரச்சொன்னார்கள். அதன்படியே ஸ்ரீமான் செட்டியாரால் நேரில் டிக்கட் பெற்று வைக்கப்பட்டிருந்தது.

போஜனத்திற்குப் பிறகு ஸ்ரீ சாமிநாத செட்டியார், ஸ்ரீ பி. சொக்கலிங்கம் பிள்ளை நான் ஆகிய மூவரும் சரியாக 1 மணிக்குப் புறப்பட்டு கோக்கலே ஹாலில் நடக்கும் மகாநாட்டிற்குப்போய் உள்ளே விடப்பட்டு மேடைமீது தலைவர்களுக்குப் பக்கத்தில் வீற்றிருந்தோம். பிராமணர்களுடைய கண் திருஷ்டிகள் என்மீது பாய்ந்தன; தொண்டர்களின் கவனங்கள் என்மீது திருப்பப்பட்டன. பிராமணத் தலைவர்களின் முகங்கள் வாடி வதங்கின. தமிழர்களின் புன்முறுவல்கள் என்னை வரவேற்று உபசரித்தன. அவர்களின் தலையசைப்பும் கைகுலுக்கும் என்னை உற்சாகப்படுத்தின. ஒரு நிமிஷ நேரம் மகாநாட்டுப் பிரதிநிதிகள் மின்சார சக்தியால் தாக்குண்டதுபோல் திகைப்புற்றிருந்தனர். பின்னர் மகாநாடு முறையே ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்தது. இந்த சமயத்தில்தான் எனது சீட்டைக்கிழிக்க பார்ப்பனர்களால் சதியாலோசனை செய்யப்பட்டது.

என்னுடைய டெலிகேட் அதிகாரப் பத்திரத்தைத்தேடி எடுத்து பரிசீலனைக்காக ஸ்ரீமான் பாவலரிடம் கொடுக்கப்பட்டது. அவர் அதை காங்கிரஸ் குமாஸ்தா ஸ்ரீ வெங்கிடகிருஷ்ணம் பிள்ளையிடம் கொடுத்து, "தண்டபாணி பிள்ளை போன்ற ஆட்களுக்கு நீர் ஏன் டெலிகேட் பாரம் கையெழுத்திட்டுக் கொடுத்தீர்? அவருக்குக்கொடுக்கும்படி உமக்கு யார் அதிகாரங் கொடுத்தது? மரியாதையாக டிக்கட்டை வாபீஸ் பெற்றுக்கொண்டு தண்டபாணி பிள்ளையை வெளியே அனுப்பிவிடுங்கள்" என்று சொன்னார்.

இதை ஸ்ரீமான் வெங்கிடகிருஷ்ணபிள்ளை என்னிடம் பணிவாக அறிவித்து "மரியாதையாக நாம் நிலைமையைச் சமாளிக்க வேண்டி உங்களுடைய டிக்கட்டை வாபீஸ் செய்துவிடுங்கள்" என்று வேண்டிக்கொண்டார். "தேசத்திற்காக காங்கிரஸ் ஊழியம் புரிந்து நெருக்கடியான சந்தர்ப்பத்தில் காந்தியின் வழிநின்று, சிறை சென்ற என் போன்ற பிராமணரல்லாத தேசிய வாதிகளின் சுயமரியாதையை நீர் காக்கவந்த முறை நன்று! நன்று!! என் நாட்டின் விடுதலைக்காக கூட்டப்பட்ட இம்மகாநாட்டில் என் போன்றார்க்கிருக்க இடமில்லையா? இருக்கச் சுதந்திரம் உண்டென்பதை நீர் அறியீரா? அந்தச் சுதந்திரத்தை வற்புறுத்த எனக்கு உரிமை யுண்டென்பதை நீர் மறந்தீர்? ஆதலால் பணங்கொடுத்துப் பெற்ற டிக்கட்டைப் பயமுறுத்தலுக்கஞ்சித் திருப்பிக் கொடேன். பணிவுக் கிரங்கியும் சுயமரியாதையை இழக்கச் சம்மதியேன். உயிர் போயினும் உள்ளிருந்து வெளியே நானாகப்போகத் தயாராய் இல்லை. டிக்கட்டையும் வாபீஸ் கொடுக்க முடியாது. என் உரிமையையும் விட்டுக்கொடுக்க மாட்டேன் எனத் தலைவர்கள் பலர் கவனத்தை இழுக்குமாறு உரிய உரத்த குரலில் பதில்சொல்லி விட்டேன். ஸ்ரீ சத்தியமூர்த்தி போன்ற தேச பக்த சிரோன்மணிகளுக்கு கண்கள் சிவந்து கோபப்பொறிகள் கிளம்பின. செய்வதின்னதென அறியாமலும், தன் செல்வாக்கும் கோபமும் என்னிடம் செல்லாதென அறிந்தும் ஸ்ரீமான் வெங்கிடகிருஷ்ண பிள்ளையின் செய்கையை நொந்து பின்வாளாயிருந்தனர். இத்துடன் 4-ந்தேதி சனிக்கிழமை வேறு விசேஷமில்லாமல் இனிது முடிந்தது. நானும் மகாநாடு முடிவு வரையில் மேடைமீதே இருந்து அது கலையும்போது கலைந்து சிறிது நேரம் வெளியூரிலிருந்து வந்திருக்கும் பிராமணரல்லாத டெலிகேட் நண்பர்களிடம் அளவளாவி வெளியே சென்று வீடுபோந்தேன்.

## 2-ம் நாள் நடவடிக்கை.

5-12-26 ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணிக்கு மறுபடியும் மகாநாடு கூடிற்று. இன்று மகாநாட்டிற்குப் போகவேண்டுமென்கிற எண்ணமே எனக்கில்லை. பகல் 1 மணிக்கு தற்செயலாக ஒரு நண்பரைப் பார்க்க நேர்ந்தபோது அவர் தண்டபாணிபிள்ளை! நேற்று மகாநாட்டிலிருந்து நீங்கள் பயந்துகொண்டு வெளியே ஓடிப்போய் விட்டதாகப் பொருள் படும்படி இன்று மகாஜன சபா ஹாலில் ஒருவர் சொன்னார். அதன் உண்மை என்ன? என்று என்னைக் கேட்டார். உடனே, பிரதிநிதியாகவும், காங்கிரஸ் மெம்பராகவும், தேச ஊழியராகவும் உள்ள எனது உரிமையையும், சுயமரியாதையையும் சோதிக்கவெண்ணி மகாநாட்டிற்குப்போக முடிவு செய்துகொண்டு புறப்பட்டேன்.

முன் யோசனையில்லை; துணையில்லை சிங்கத்தின் குகையில் திவட்டியுடன் செல்வதுபோல், டிராம் வண்டியிலிருந்து இறங்கியவுடன் சுயமரியாதை முன் இழுக்க, தைரியம் என்னைத் தள்ளிக்கொண்டுவந்து, ஊக்கம் என்னைக் கோக்கலே ஹாலில் உள்ளே விட்டது. சரியாகப் பகல் 1-30 மணிக்கு எல்லோரும் சாக்கிரதையாக விழித்துக் கொண்டு மகாநாடு நடத்துஞ் சமயத்தில் நான் நேரே தலைவர்கள் வீற்றிருக்கும் மேடைக்குச் சென்று அங்கு அவர்கள் பக்கத்தில் சௌகரியமான இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். பிராமணர்கள் பிரமைபடைந்தனர். தொண்டர்கள் மயக்கங் கொண்டனர். தலைவர்கள் தவித்தனர்; பிராமணரல்லாதார்கள், பொல்லாத பாவிகளின் மத்தியில் நான் துணையில்லாமல் ஆபத்துக்குள்ளாகித் தங்கியிருப்பதுபோல் என்மீது இரக்க விழிகாட்டி ஏங்கியிருந்தனர். பட்டப்பகலில் கோட்டையைவிட்டோமேயென ஷாபிகளும், முன் அணியில் நின்ற ஏவலர்களும், பின் அணியில் நின்ற பாவலர்களும் என்னை மேடைமீது கண்டு வெட்கித் தலைகுனிந்து ஆச்சரியமுற்றுத் தலைவர்களின் தூண்டுதலால் சதியாலோசனை செய்து என்னை எப்படியாவது பலாத்காரத்தினால் ஒழுங்கீனமாக, நீதியையும் கவனியாது மகாநாட்டைவிட்டு வெளியேற்ற முடிவுசெய்துவிட்டனர்.

நான் உட்கார்ந்த பின்னர் எனது உரிமையும், சுயமதிப்பும் பறிமுதல் செய்யப்படாததைக்கண்டு சந்தோஷித்து உடனே எழுந்து வெளியே போக எண்ணிக்கொண்டிருந்த எனக்கு இன்னும் அதிக உரிமையையும் சுயமதிப்புணர்ச்சியையும் கொடுத்தருளிய எல்லாம் வல்ல ஆண்டவனை அடிவணங்கி மேற்கொண்டு நிகழ்ந்தவற்றைக் கூறுகின்றேன். கேண்மின்!

சுமார் 2-மணிக்கு அதாவது நான் மேடைமீது வந்துட்கார்ந்த அரைமணி நேரங் கழித்து ஒரு பிராமண வாலண்டியர் என்னிடம் தைரியமாய் வந்து "நீர் இங்கெப்படி வந்தீர்?" எனக்கேட்டான் "எல்லோரையும் விட்டு என்னைமட்டும் நீர் கேட்பதின் அர்த்தம் விளங்கவில்லை" என்றேன் 'உம்மை மட்டுந்தான் கேட்கும்படி என்னுடைய தலைவரின் ஆணை" என்றான். "எல்லோரும் எந்த உரிமையைக்கொண்டு இங்கு வந்திருக்கின்றார்களோ அதே உரிமையுடன்தான் நானும் வந்திருப்பதாக உமது தலைவரிடம் அறிவி" என்றேன். "நீர் டெலிகேட்டா?" என்றான் "அதற்கென்ன சந்தேகம் வந்தது!" என்றேன். "டிக்கட்டை காண்பியுங்கள்" என்றான். "எல்லாருடையதையும் பார்த்துவிட்டாயா?" என்றேன். "இல்லை உம்முடையதைத்தான் நான் பார்க்கவேண்டும்" என்றான். "என்னுடையதைமாத்திரம் பார்க்கவேண்டுமென்றால் நான் அந்தப்படி காட்ட முடியாது நீர் எல்லாருடையதையும் பார்த்துவரும்போது என்முறையில் என்னுடையதையும் காண்பிக்கிறேன்" என்றேன். "நீர் காண்பிக்காவிட்டாலும் நான் பார்த்துவிட்டேன். உம்மிடம் டெலிகேட் டிக்கட் இருப்பது எனக்குத் தெரியும் மேடைமீது தலைவர்கள்தான் உட்காரவேண்டும். டெலிகேட் உட்காரும் கீழே உள்ள இடத்திற்குப்போங்கள்" என்றான். "இங்கே மேடைமீதுள்ளவர்களெல்லாம் தலைவர்கள்தானா?" என்றேன். "ஆம்" என்றான். "அப்படியானால் நானும் தலைவராகத்தானே இருக்கவேண்டும்" என்றேன். "அது முடியாது" என்றான். "யாரால்" என்றேன். "உம்மால்" என்றான். "உம்முடைய தலைவர் திரு சீனிவாசய்யங்காரிடம் சென்று (அவரைக்காட்டி) தண்டபாணி பிள்ளை தலைவராயிருக்க முடியுமா அல்லது முடியாதா. அவர் மேடைமீதிருக்கக்கூடுமா. அல்லது கூடாதா? என்பதைக் கேட்டுவந்து சொல்லும். பதில் தெரிந்தபின்னர் நான் உசிதமானதைச்செய்ய யோசிக்கின்றேன்" என்றேன். உடனே அத்தொண்டர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் சென்று பேசிக்கொண்டிருந்துவிட்டு கீழே இறங்கிப்போய்விட்டார். ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பக்கத்திலிருந்த ஸ்ரீ எ. ரங்கசாமிஐயங்காரிடம் ஏதோ சொன்னார். அதுமுறையே ஸ்ரீ சத்தியமூர்த்திக்கும் ஏனைய உபதலைவர்களுக்கும் கூறப்பட்டது. மேடையின்முன் இருந்த குழந்தை என்னும் ஒரு கிறிஸ்தவப் பெரியார் இந்தப்படத்தைக்கண்டு எழுந்து வெளியே சென்றார். ஒரு க்ஷணத்தில் உயிரைக் கொள்ளைகொள்ளும் யமதூதர்கள்போல் பிராமண வாலண்டியர்கள் என்னைச் சுற்றி வளைந்து சூழ்ந்து எனக்கு முன்னும் பின்

னும் பக்கத்திலிருவருமாக நால்வர் உட்கார்ந்துகொண்டும் ஏனையோர் பின்புறமாக நின்றுகொண்டும் சமிக்ஞைக்கு எதிர்பார்த்திருந்தார்கள் உயிருடன் இவர்கள் தோள் மீது சுமந்து செல்லும்படியான சௌகரியத்தைக்கொடுக்கவேண்டி என் சரீரத்தை கெட்டி முறித்து சரிப்படுத்திக்கொண்டு தயாராக இருந்தேன். தலைவர்களின் உத்திரவு தொண்டர்களுக்குக் கிடைத்துவிட்டது. உடனே அவர்களின் தலைவர்.

"தண்டபாணி பிள்ளை! மரியாதையாக எழுந்து வெளியே போகிறீரா அல்லது உம்மை தூக்கி வெளியே கொண்டுபோகவேண்டுமா?" என்றார்.

நான்:—"உங்கள் தகப்பனார், பாட்டனார் எங்கள் தகப்பனார் பாட்டனார்களை சிரார்த்தம் பெற்று இறந்தபின் தூக்கி மோட்சத்திற்கனுப்பினார்கள். அவர்கள் வயிற்றிற் பிறந்த நீங்கள் அந்த நன்றியறிதலுடன் என்னை உயிருடன் தூக்கி அங்கு அனுப்புவீர்களாகில் மிகவும் வந்தனமுடையவனாக யிருப்பேன் என்றேன்.

உடனே என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த தொண்டர்கள் என்னை சம்மணம் கொட்டியிருந்தபடி தூக்கிக்கொண்டார்கள். நான் கொஞ்சம் உயரமான நிலைமைக்கு வந்ததும் என் கீழிருந்த அக்கிராசனர் ஸ்ரீமான் கே. வி ஆரங்கசாமி அய்யங்காரைப்பார்த்து, மிஸ்டர் பிரசிடெண்ட்! சிலர் போக்கிரித்தனமாக என்னை இம்மாதிரி இடத்தைவிட்டு தூக்கிச்செல்ல எத்தனிக்கின்றனர். எனக்கு இம்மேடையிலிருக்க உரிமை உண்டா இல்லையா? என்று உரத்த குரலில் அவர் காதில் விழும்படி கேட்டேன். உடனே மேடையிலும் கீழுமுள்ள பிராமணர்கள் கொல்லென்றுகிளம்பிவிட்டார்கள். "போக்கிரி" என்ற சொல்லை வாபிஸ் வாங்கும் என்றார்சிலர். "மன்னிப்புகேளும்" என்றார் சிலர். "வெளியே தள்ளும்" என்றார் சிலர்; "கொல்லும்" என்றார் சிலர். அக்கிராசனர்மட்டும் விஷயத்தை அறிவதற்காக என்னைத் தன் கிட்ட வரும்படி சைகை காட்டினார். மகாநாடு பூராவும் ஒரே குழப்பத்தில் கலந்தெழுந்திருந்து அங்கங்கே பிராமணர் பிராமணரல்லாதார் உணர்ச்சியினால் ஆளுக்கொரு கட்சியில் சேர்ந்து சச்சரவிட ஆரம்பித்தார். என்னை சுமார் 40 வாலண்டியர்கள் தூக்கிக்கொண்டு கீழே இழுக்கவும் மேடைமீதிருந்த பிராமணர் சென்னை சட்டசபை மெம்பர்களும் டில்லி சட்டசபை மெம்பர்களும் கீழே தள்ளவும் ஆகிய திருவிளையாடல்கள் புரிந்தனர்

நான் தலைவராகக் கருதப்படாமல் வாலராக எதிரிகளால் கருதப்பட்டபடியினால் வாலிபெற்றது போல் எதிரிகள் பலத்திலும் நான் பெற்றுக்கொண்டதாக சூஷ்ம நோத்தில் ஓர் உணர்ச்சி என் உள்ளத்தில் உதித்தது. ஒரு தலைவர் என்னைத் தாக்கும்படி தம் கையிலிருந்த வெள்ளிக் கடிவை கீழுள்ள வாலண்டியரிடம் கொடுப்பதைப் பார்த்தேன். என் கழுத்தைச் சுற்றியிருந்த சுமார் 6 முழ நீளமுள்ள கதர் சால்வை யைப்பற்றி தேர் இழுப்பதுபோல் சிலர் என்னைக் கீழே இழுத்தனர். மேடையின் ஓரத்தில்கீழே விழும்தன்மையில்பெருப்பாலுமிருந்தும் நான் அமைதியாய் என் இயற்கையின்படி கலகக்காரர்களைக்கண்டு ஆநந்தத்தில் நினைத்துக்கொண்டிருந்தேன். நிலைமையை உணர்ந்தேன் ஒரு டில்லி சட்டசபை மெம்பரின் தடியால் என் இடுப்புக்குக் கீழே ஒருவர் குத்த எத்தனித்தார். நல்லவேளையாக அத்தடியைப் பிடுங்கிக்கொண்டு என்னைக் குத்தினின்றும் காப்பாற்றிய தோழர் ஸ்ரீமான் சாமிநாத செட்டியாரின் தீரச்செயல் தமிழர்கள் என்றும் போற்றத்தக்கது. அத்தடியை ஸ்ரீமான் சாமிநாத செட்டியார் உடையவரைக் கண்டுபிடிக்க முடியாமையால் தம் வசம் வைத்திருக்கின்றார். ஆனால் கூட்டத்தில் ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் தம்முடைய தடி காணவில்லையென்று தேடிக்கொண்டிருந்ததை பின்னர் அறிந்தேன். நான், மேற்படி வெள்ளித்தடி இருவர் கையில் சர்க்கஸ் பார் மாதிரி இருந்தபடியால் அதைப் பலமாய்ப்பற்றி ஓரத்தில் உள்ள மரக்கிராதியிலும், தூணிலும் இரு கால்களையும் வைத்து உராடி தொண்டர்களை உதறித்தள்ளிவிட்டு, என்னைப் பின்புறமாக தள்ளியவர்களின் தாடிகளையும் நெக்டை (கழுத்துப்பட்டி) களையும் பிடிக்க முயன்றால் அகப்பட்டதைப்பிடித்துக்கொண்டு எல்லோரினின்றும் தப்பி அக்கிராசனருக்குமுன்னே மேடையில் வந்து கெம்பீரமாக உட்கார்ந்தேன். திருப்பூர் ஸ்ரீமான் ஆஷா செட் அணைத்துக்கொண்டு உற்சாகப்படுத்தி என்னை ஆற்றினார். நாலைந்து தொழிலாளர்கள் என்னைப் போற்றினர். இச்சமயத்தில் தொண்டர்களும் சில பிராமணத் தலைவர்களும் நான் வெளியே செல்லவேண்டுமென்று அக்கிராசனரிடம் கூறினர். பக்கத்திலிருந்த ஸ்ரீமான் சீனிவாச ஐயங்கார் என்னைப்பார்த்து கீழ்வரும் சம்பாஷணையை நடத்தினார்.

ஐயங்கார்:—என்னைத் திட்டிப் பிரசாரம் செய்த உமக்கு இங்கு என்ன வேலை?

நான்.—இந்த மஹாநாடு உம்முடையதா அல்லது பிராமணர்களுடையதா? அப்படியானால் இங்கு எனக்கு வேலையில்லை. தமிழ் மாகாண மகாநாடானால் உம்மைவிட எனக்கு அதிக வேலை இங்கிருக்கிறது.

ஐயங்கார்:—நீர் காங்கிரஸ் மெம்பராக இருக்க என்ன யோக்கியதை இருக்கிறது?

நான்:—உம்மைவிட காங்கிரசில் எனக்கு அதிக யோக்கியதையும், பொறுப்பும், உரிமையும் உண்டென்பதை நீர் ஏன் அறிய முடியவில்லை.

ஐயங்கார்:—(ஸ்ரீ எ. ரங்கசாமி ஐயங்காரைப்பார்த்து) பிரதிநிதி அல்லவென்றும், இங்கிருக்க முடியாதென்றும் பொதுஜனங்களுக்கு அறிவித்துவிடு.

ஸ்ரீ எ. ர. ஐயங்கார்:—(எழுந்து நின்று மகாநாட்டைப்பார்த்து) "ஸ்ரீமான தண்டபாணி பிள்ளை (ஸ்ரீமான் என்று சொல்லக்கூடாது என்ற கூக்குரல்) காங்கிரஸ் மெம்பரும் அல்ல, பிரதிநிதியும் அல்ல அவர் மன்னிப்பு கேட்டுக்கொள்ளுகிறார். அவர் பிரதிநிதி டிக்கட்டை வைத்திருந்தபோதிலும் அது செல்லத்தக்கதல்ல இந்த மகாநாட்டில் இருக்க அவருக்கு உரிமையில்லை" என்றார். உடனே அக்கிராசனரைப்பார்த்து பிரதிநிதி டிக்கட்டை காண்பித்து, என்னை இங்குபேச உரிமையில்லாத என்போன்ற பிரதிநிதியாகிய ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்கார் இப்படி பேசுவது ஒழுங்காகுமா, இதற்கு பதில் அளிக்கவும், எனக்கு நியாயங்கிடைக்கவும் எனக்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று கேட்டேன் அக்கிராசனர் ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்காரைக் கண்டித்துவிட்டு பொது ஜனங்களை அமைதியாய் இருக்கும்படி கூறி எனக்குப்பேச இடங்கொடுத்து "போக்கிரி"யை வாபிஸ் பெறவேண்டுமா என்பதை அறிந்து கூட்டத்தை சமாதானப்படுத்துங்கள் என்றார். நான் பேசவேண்டாமெனப்பலரும், வேண்டுமெனச்சிலரும் போட்ட கூச்சலும் குழப்பமும் அக்கிராசனரால் அடக்கப்படாமையால் நான் உட்கார்ந்துவிட்டேன்.

என்னை வெளியேற்றும் காரியம் கைகூடாமையால் எ. ரங்கசாமி ஐயங்கார் நான் உட்கார்ந்ததும் என்னைப் பார்த்து,

"நீர் கலகம் செய்ய வந்திருக்கிறீர்" என்றார்.

நான்:—நான் கலகம் செய்ய வந்திருந்தால் இம்மாதிரி தனியாய் வந்திருக்க முடியாதென்றும், எனக்கும் என் கொள்கையைப்பின் பற்றுகிற சிலர் உண்டென்றும், இப்பொழுதுகூட நீங்கள் கலகம் செய்யத்தயாராய் இருந்தால் என் உயிரை விட்டாவது அதை அடக்கி என் உரிமையை இங்கே நிலைநாட்டமுடியும் என்றும் அக்கிராசனருக்கும்கேட்கும்படி சொன்னேன். உடனே அக்கிராசனர் இனி கலகம் வேண்டாம், நீங்கள் இங்கே தாராளமாய் எனக்கு பக்கத்தில் கௌரவ விசிட்டர் ஸ்தானத்தில் வீற்றிருங்கள் என்று ஆசனங் கொடுத்தார். நான் அங்கே சென்று அமர்ந்திருந்தேன். பின்னர் ஸ்ரீ சீனிவாசய்யங்கார் அக்கிராசனருடன் சொல்லி என் பிரதிநிதி டிக்கட்டைப் பார்க்கவேண்டுமென்று கேட்டார். ரூ. 2 முன்பணமாக ஜாமீன் கொடுத்தால் கொடுக்கப்படுமென்றேன். உடனே ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்கார் தம் கையிலிருந்து ரூ. 2 எடுத்து என் கையில் கொடுத்தார்; நான் பெற்றுக்கொண்டபின் டிக்கட்டை அக்கிராசனரிடம் கொடுத்தேன். இத்துடன் 1 மணி நேரம் கடந்து அமைதி நிலவி காரியம் நடைபெற மகாநாடு ஆரம்பித்தது. நான் பின்னும் 1-மணி நேரம் மேடைமீது அமர்ந்திருந்து என் இஷ்டப்பிரகாரம் எதிரிகள் வெட்கித் தலைகுனிய எழுந்து நண்பர்கள் சிலருடன் கடற்கரைக்கு உலாவப் போய்விட்டேன்.

1: குறிப்பு:— பிராமணர்களுக்குள்ளே அக்கிராசனரின் நடத்தை நடுநிலைமையாகவும், நேர்மையாகவும் என் விஷயத்தில் இருந்ததுபற்றி அவருக்கு என்னுடைய வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

2 பெருங்கூட்டத்தில ஒப்பற்ற ஒருவராய் எனக்கு உதவியளிக்க முன்வந்துதவிய ஸ்ரீமான் எஸ். சாமிநாத செட்டியாருக்கு நன்றி என்றும் உரியதாகுக.

3. நெம்பர் 61-உள்ள எனது பிரதிநிதி டிக்கட் இன்னும் என்னிடம் வாபீஸ் செய்யப்படவில்லை என்பதையும் நேயர்களுக்கு ஞாபக மூட்டுகிறேன்.

("தமிழ்நாடு" விசேஷ அனுபந்தம்.)

# ஜாதிப்பேயை யோட்டல்.

"பாம்பாட்டிச் சித்தர் பாடல்" நடை.

(கோலார் தங்கவயல் **J. M.** தாவீது பிள்ளை அவர்கள் எழுதியது)

ஓடுபேயேவிட் டோடுபேயே எங்கள்
உயர்ந்த இந்தியாவைவிட் டோடுபேயே
கேடிழைத் தெங்களைக்கெடுத் திட்டபேயே பொல்லாக்
கேவல குணம்படைத்த ஜாதிப்பேயே ஓடு
பிரம்மாமுகத்திலேபி ராமணரும் பலர்
பேசும் புஜத்தில் க்ஷத்திரியரென்றும்
பெருமைவைசியர்கள் தொடையிலும் சூத்திரர்கள்
பிறந்தனர் பாதத்திலே யென்று வகுத்தாய் ஓடு
சட்டசபையிலும் உந்தன்கொடுமை பேசும்
தகைபஞ் சாயத்திலு முந்தன்கொடுமை
கட்டியபோஸ் டாபீஸ்களி லுந்தன்கொடுமை ஊரைக்
காட்டும்ரயில் வண்டியிலு முந்தன்கொடுமை ஓடு
கோவிலில குளங்களில் உந்தன்கொடுமை ஐயோ
கூறும்பள்ளிக்கூடங்களி லுந்தன்கொடுமை
நாவிதன்பால்போனலு முந்தன்கொடுமை பொல்லா
நாற்றமுறுங் கக்கூஸ்களி லுந்தன்கொடுமை ஓடு
நாடகசாலைத்திலு முந்தன்கொடுமை இலகும்
நல்ல மடங்களிலு முந்தன் கொடுமை
நாடும்வைத்திய சாலைகளி லுந்தன்கொடுமை பாடல்
நடக்கும் கச்சேரியிலு முந்தன் கொடுமை ஓடு
சந்துபொந்து சாவடியிலுந்தன்கொடுமை நல்ல
தண்ணீர்பந்தல் சத்திரத்திலுந்தன்கொடுமை
சந்தைக்கடைத் தெருக்களி லுந்தன்கொடுமை வெறும்
ஜனக்கூட்டச் சபையிலு முந்தன்கொடுமை ஓடு
வீதி வழிகளிலு முந்தன் கொடுமை கூறும்
வேலைஸ்தலங்களிலு முந்தன் கொடுமை
நீதிமன்றங்களிலு முந்தன் கொடுமை பொது
நிலங்கள் வயல்களிலு முந்தன் கொடுமை ஓடு
மோட்டர்கார் வண்டியிலு முந்தன்கொடுமை இந்து
முறைவேத புத்தகத்தி லுந்தன்கொடுமை
காட்டும் "இந்துலா" நூலி லுந்தன்கொடுமை நாவல்
கதைப்புத் தகத்திலு முந்தன்கொடுமை ஓடு
கள்ளுக்கடையிலு முந்தன்கொடுமை விற்கும்
காய்கறிக்கடையிலு முந்தன் கொடுமை
பள்ளமேடு நதிகளி லுந்தன்கொடுமை ஐயோ
பகரும் ஓட்டல்களிலு முந்தன்கொடுமை ஓடு
கொடுமை கொடுமை ஜாதிக் கொடுமையாலே எங்கள்
கூறுமிந்தியா தேசம் வறுமை யடைந்து
அடிமையாயிருக்கவே செய்துவிட்டாயே கொடும்
அற்பமதி யுள்ளவென ஜாதிப்பேயே ஓடு
உண்டவீட்டை இரண்டகமாய்ச் செய்தபேயே தினம்
ஊருடமைக்காசை யுற்றழலும் பேயே
ஒண்டவந் தெங்களை யொடுக்கினபேயே நீ
ஓங்காரமிட்டுக்கொண் டோடுபேயே ஓடு
கவையிருக்குமட்டும் காலைப்பிடிப்பாய் கவை
கழிந்தவுடனே காலை வாரியடிப்பாய்
அவலகுணம் படைத்த வற்பபேயே நீ
அழகு இந்தியாவைவிட் டோடுபேயே ஓடு
தமிழரைப் பறையரென்றழைத்த பேயே பெரும்
தமிழரசரையேமாற்றியபேயே
தமிழ்மக்களைக் கழுவேற்றியபேயே நீ
தக்காமலிந்தியாவை விட்டோடுபேயே ஓடு
தமிழ்நாட்டைத் திக்கிரையாக்கினபேயே எங்கள்
தமிழ் நாட்டிற்குக் குடியேறினபேயே
தமிழரைச் "சூத்ரர்" என்றழைத்தபேயே உன்
தலையைக்காட்டாமல் மறைந்தோடு பேயே ஓடு
உன்னாலே இந்தியா தேசம் ஒடுங்கிப் போச்சே புகழ்
ஒருநல மொன்பதுகு லையாச்சே
மன்னுந் தமிழ்க்குடிகள் மடியலாச்சே எங்கள்
வறுமைப் பிணிக்கு நீ காரணமாச்சே ஓடு
ஐந்தாம் ஜார்ஜியரசர் எங்கள் பக்கமே அவர்
அழகு மந்திரி தந்திரிகள் எங்கள் பக்கமே
பைந்தமிழ்த் தலைவரெல்லாம் எங்கள் பக்கமே புஜ
பலமுள்ள தமிழ் மக்கள் எங்கள் பக்கமே ஓடு
மைசூர் மஹாராஜேந்திரரெங்கள் பக்கமே அவர்
மகிழ் தம்பியுவராசர் எங்கள் பக்கமே
மைசூர் திவானவர்கள் எங்கள் பக்கமே மைசூர்
மந்திரிச்சபையில் சிலர் எங்கள் பக்கமே ஓடு
மாவளரும காந்திவீரர் எங்கள் பக்கமே டாக்டர்
வரதராஜுலு கோமானுமெங்கள் பக்கமே
பூவார் எஸ். ஏ. மூர்த்திஐயர் எங்கள் பக்கமே புகழ்
பூத ராமசாமி நாய்க்கர் எங்கள் பக்கமே ஓடு
திருச்சிதுவை கொடியெங்கள் பக்கமே உயர்
திகழுங்கிறிஸ்தவர்கள் எங்கள் பக்கமே
அருஞ்சைவர் வைணவர்கள் எங்கள் பக்கமே புகழ்
அவியும் புத்தரிட்டமும் எங்கள் பக்கமே ஓடு
ஜாதிப்பேயே யுந்தனின் தலையையுடைக்க இதோ
"தமிழனும்" "தமிழ் நாடு" "குடியரசு"ம
ஒதும் "பொதுநல"னும் "சத்தியநேச"னும் கதை
யோடுதித் துவிட்டார் நிசமோடு பேயே ஓடு
உந்தனின் மேலே யேறிச்சவாரி செய்யவே "தமிழன்"
உதித்துவிட்டான் கோலார் தங்கவயலிலே
அந்தோ! அவன் காத்திலகப்படாமலே நீ
அழிந்து இந்தியாவைவிட் டோடுபேயே ஓடு
ஆதரையில் சுயநலங்கொண்டபேயே உன்
அற்பகுணமெல்லாம் வெளிவந்துவிட்டதே
போதும் போதும் போதும் போதும் ஜாதிப்பேயே நீ
புறப்பட்டோட்டம பிடிக்கச்சொன்னேன் சண்டிப்பேயே ஓடு
தாவீதுபுலவன் உந்தன் நாற்றம்பாவையும் நல்ல
தமிழாலேபாடக் கங்கணங் கட்டிக்கொண்டான்
கேவலமடைவதற்குள் ஜாதிப்பேயே நீ
கேண்மை இந்தியாவை விட்டோடு பேயே ஓடு

---

## தென்காசியில்

### பார்ப்பனர்கள் ஒத்துழையாமையும் பகிஷ்காரமும் கதவடைப்பும்.

தென்காசி சிவன் கோவிலில் பார்ப்பனர்களின் வேதபாராயணத்தைப்போலவே தமிழ் மக்களின் தேவார பாராயணமும் செய்யப்படவேண்டுமென்பதாகக் கருதி தேவார பாராயணம் ஆன பிறகு பிரசாதம் கொடுக்கப்படவேண்டும் என்று தேவஸ்தான போர்டாரும் கமிட்டியாரும் தர்மகர்த்தாக்களும் உத்திரவு போட்டதினால் அப்பேர்ப்பட்ட சுவாமி தெரிசனமும் பிரசாதமும் தங்களுக்கு வேண்டியதில்லை என்று சொல்லி அதோடு ஒத்துழையாமையும் பகிஷ்காரமும் செய்து அவ்வூர் பார்ப்பனர்கள் எல்லாம் ஒன்றுகூடி பார்ப்பன ஸ்ரீகள் புருஷர்கள் குழந்தைகுட்டிகள் சகிதம் யாரும் அக்கோயிலுக்கு போகக்கூடாது என்றும் சுவாமியை தரிசிக்கக் கூடாதென்றும், பரிசாரகம் முதலிய வேலையைச் செய்யக்கூடாது என்றும் சுவாமி தங்கள் வீதிக்கு எழுந்தருளிவந்தாலும் ஒவ்வொரு பார்ப்பனரும் வீதிதெருக்கதவை அடைத்துக்கொள்ளவேண்டும் என்றும் தீர்மானம் செய்துகொண்டு அந்தப்படி அமுலிலும் நடத்திவருகிறார்கள் என்கிற விபரம் அறிய மிகவும் சந்தோஷமடைகிறோம். ஏனெனில் பார்ப்பனர்கள் பகிஷ்காரம் செய்த வேலைகளை ஆதிசைவ குருக்கள் பட்டமார்களைக்கொண்டு கோவிலதிகாரிகள் வேலை வாங்கி வருகிறார்கள். இதுபோலவே மற்ற ஊர்களிலும் உள்ள பார்ப்பனர்களும் மற்றக்கோவில்களோடும் சுவாமிகளோடும் ஒத்துழையாமையும் பகிஷ்காரமும் செய்துவிடுவார்களேயானால் நமது தெய்வங்களைப்பிடித்த சனியனும் நமது மதங்களைப் பிடித்த கிரகங்களும் அடியோடு ஒழிந்து யோக்கியமானதும் உண்மையானதுமாக விளங்கும்.

## கௌரி ஆயுர்வேத சித்த வைத்ய மந்திரம்.

கௌரி பாலாம்ருத ஸஞ்சீவி குழந்தைகளுக்குச் சாதாரணமாய் உண்டாகும் பலவித நோய்களைக் கண்டிக்கத்தக்க ஔஷதங்கள் ஆறு அடங்கிய அழகிய பெட்டி.

சாதாரணமாகக் குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களைக் கண்டிக்கக்கூடிய பின்வரும் ஆறுவிதமான மருந்துகள் பிரத்தியேகமான சீசாக்களிற்போட்டு ஒரு பெட்டியில் வைக்கப்பட்டிருக்கின்றன. 1. குழந்தைகளின் ஜலிப்பு, சளிக்கட்டு இருமல் இவைகளுக்கு உபயோகிக்கும் கௌரி கோரோஜனை 2. ஜுரம் இசிவு ஜன்னிகள் வந்த காலத்தில் கொடுக்கும் கௌரி கஸ்தூரி 3. ஸ்நானம் செய்வித்த பின் குழந்தைகளுக்கு உரைத்துப்போடும் உரைமாத்திரையாகிய கௌரி பால கற்பம் 4. குழந்தைகளின் வயிற்றில் கிருமிகள் கட்டுகள் சேராமல் பேதியாவதற்காகக் கொடுக்கும் கௌரி பால விரோசனி 5. குழந்தைகளுக்குண்டாகும் வயிற்றுப்போக்கை நிறுத்தவல்ல கௌரி குணாகந்தம் 6. குழந்தைகளுக்கு மாந்தங்கள் வந்தால் கொடுக்கும் கௌரிபாலபோஷணி. இந்த ஆறு அரிய மாத்திரைகள் இப்பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. உபயோகிக்கும் வழிகளைப் பெட்டிக்குள்ளிருக்கும் பிரயோக விதியில் காண்க. பெட்டி ரூ 3.

இப்பெட்டி ஒவ்வொரு வீட்டிலும் இருப்பது அவசியம். இருந்தால் குழந்தைகளை வியாதிகள் தொடரா வண்ணம் காப்பாற்றும். வைத்தியர்களைத் தேடவேண்டிய அவசியமில்லை. குழந்தைகட்கு வியாதிவந்தால் தக்க சிகிச்சை இல்லாமல் சிசு மரணம் அதிகம் ஆகின்றன. இதன்பொருட்டே மூன்று வருடங்களுக்குமுன் சென்னையில் வெளிவரும் தமிழ்நாடு பேப்பரில் குழந்தைகள் வைத்தியம் அதாவது குழந்தைகளை வியாதி தொடராத வழிகளை வாரம் வாரம் எழுதி வந்திருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் குடும்ப வைத்யம் அதாவது வைத்யர்கள் தயவின்றி தாங்களே வைத்யம் செய்துகொள்ளும் புத்தகம் வெளிவரும். அதில் வியாதி வராமல் இருக்கும் மார்க்கங்கள், நோய் வந்துவிட்டால் அதனை நிவர்த்திக்கும் சுலபமான முறைகள் இன்னும் பல விஷயங்கள் அடங்கியிருக்கும் இது பொது ஜன நன்மையைக்கோரி அநேகர் வேண்டுகோளின்மேல் எழுதி முடிக்கப் பெற்றது. பல வைத்தியர்களும் டாக்டர்களும் பார்த்து நிராசை விடப்பெற்ற குஷ்டம், குன்மம், சுவாசகாசம், பாரிசவாய்வு, ஆரம்ப ஆனைக்கால், பிளவைக்கட்டி, நெறி கட்டி வரும் ஜுரம் பிளேக், காலரா, கண்டமாலை இன்னும்பல கடின வியாதிகட்கும் சிறந்த சஞ்சீவி ஔஷதங்கள் இருக்கின்றன. மேற்படி நோய்கள் ஸ்ரீ கௌரி தேவியின் அனுக்கிரகத்தால் அநேகம் குணப்பட்டு நற்சாட்சிப் பத்திரங்களும், தங்கமெடல்களும் பெற்றிருக்கிறேன். இதனை எம்மிடமுள்ள முழு விபரம் அடங்கிய கேட்லாக்கில் காணலாம். சில போலி வைத்தியர்கள் மலிந்துள்ள இக்காலத்தில் மேற்படி வியாதிகளைக் குணப்படுத்துகிறேன் என்றால் எம்மிடம் ஔஷதம் வாங்கி உபயோகிக்காத புதிய நண்பர்கட்கு நம்பிக்கை வருவது கஷ்டம்.

டாக்டர் V. R. சுந்தரம்,

ஸ்ரீகௌரி ஆயுர்வேத வைத்ய மந்திரம். 268, பைகிராப்ட்ஸ் ரோட், இராயப்பேட்டை, சென்னை.


## ஆப்பக்கூடல் போஸ்டாபீசும் ஆதித்திராவிடக் கிறிஸ்துவர்களும்

பெருந்தலையூருக்கு தபால் கடிதங்கள் மணி ஆர்டர்கள் முதலியவைகள் பட்வாடா செய்வது ஆப்பக்கூடல் பிராஞ்சு போஸ்டாபீஸ். இந்த ஆபிஸை பார்ப்பனத் தெருவுக்குள் வைத்துக்கொண்டு ஆதித்திராவிடர்கள் அவ்வீதியுட் புகவிடாமல் தடுக்கப்படுகின்றனர். என்ன பரிதாபம்! இந்திய பாவலர் நாவலர்களும், இந்திய துரைத்தனர்களும் ஆதித்திராவிடர்பால் இரக்கம்கொண்டு கொடிய தீண்டாமை முதல் சகல வைபவதடைகளையும் வேரறக் களையவேணுமென்பதாய்ச் சட்டமாக்கிக்கொண்டு தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு வரும் இக்காலத்தில்கூட பார்ப்பனர் குறும்புத்தனம் சொல்லத் தரமன்று. இந்த ஆபீசில் ஒரு பார்ப்பனர் போஸ்ட்மாஸ்டராயிருக்கிறார். இவ்வூருக்கு வாரத்தில் ஒரு தடவைகூட வருவது கஷ்டம். ஆதித்திராவிடர்கள் மற்ற வகுப்பாரைவிட மிகுந்த ஏழைகளாயிருப்பதால் காப்பித் தோட்டங்களுக்கும், ரப்பர் தோட்டங்களுக்கும், பினாங்கு, சிங்கப்பூர், கொழும்பு முதலிய மலையா நாடுகளுக்கும் போய் வயிறு வளர்க்கிறவர்களாயிருக்கிறார்கள். 200 மைல் முதல்கொண்டு 2000 மைல் வரையும் போயிருக்கிறவர்கள் அனுப்பும் தபால் கடிதங்கள் பட்டவாடாவாகாமல் பெருந்தலையூர் சில்லரைக் கடைகள்தோறும் கிடக்கின்றன. கடைக்காரனுக்கு இஷ்டமிருந்தால் 2 வாரம் 3 வாரம் கழித்து கிடைக்கும். அதுவுமில்லையேல் கடிதங்களும் கிடைக்கிறதில்லை. போஸ்ட்மாஸ்டர் அத்தி பூத்ததுபோல் வந்தால் ஆதித்திராவிடர்கள் கையில் கொடுக்காமல் ரோட்டில் எறிந்துவிடுகிறது வழக்கம். பார்ப்பனர் போனதுக்கும் பிற்பாடுதான் அக்கடிதங்களை எடுக்கவேண்டும். இதுவென்ன கொடுமை! ஸ்டாம்பு, கவர், கார்டு முதலியன சில்லரைக் கடையில்தான் வாங்கவேண்டும். ஒரு அணா ஸ்டாம்பு 0—1—3 அணாவும், ஒரு அணா கவர் 0—1—6 அணாவும், கார்டு ஏழு பைசாவும் கொடுத்து வாங்கவேண்டும். கஞ்சியோ கஞ்சி சோறோ சோறு என்று கத்திக்கதறி நெஞ்சஞ் துடிதுடித்து நாளெல்லாம் பாடுபட்டாலும் சாசரி 3 அணாவுக்குக்கூட வழியில்லாமல் பரதபிக்கும் ஏழை மக்கள் கவர்ன்மெண்டார் விதி விதித்திருக்கும் ஸ்டாம்புக் கடிதங்களுக்குமா லாபம் கொடுத்து வாங்க வேண்டும்? ஆற்றுக்கு அக்கரையிலிருக்கும் போஸ்டாபிசை பெருந்தலையூருக்கு மாற்றிக்கொடுத்து அல்லது வேறே ஓர் பிராஞ்சு போஸ்டாபிஸ் நியமித்துக் கொடுக்கும்படியாய் கவர்ன்மெண்டை கேட்டுக்கொள்ள வேண்டுமென்பதாக பெருந்தலையூர் ஆதித்திராவிடர் முன்னேற்றச்சங்கமும் 12-11-26 தேதியில் கீழ்க்கண்டபடி தீர்மானம் கொண்டுவந்திருக்கிறது. இந்தியா துரைத்தனத்தார்கள் தயவுசெய்து இக்கொடுமைகளை நிவர்த்திக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. கூட அதிகாரிகள் கவனிப்பார்களென்றே நம்புகிறோம்.

ஈரோடு லண்டன் மிஷன் 72 கிராமங்களிலிருக்கிறது. இதில் 10000 ஆதித்திராவிடக் கிறிஸ்துவர்களிருக்கிறார்கள்; இவர்களும் பறைபிரஸ்டென்றே அழைக்கப்படுகிறார்கள். உயர்ந்த கிறிஸ்துவர்கள் என்றும், ஆதித்திராவிட கிறிஸ்துவர்கள் என்றும் இருவகுப்பு உண்டு. உயர்ந்த ஜாதிக் கிறிஸ்துவர்கள் தீண்டப்படாக் கிறிஸ்துவர்களைத்தொடவோ அல்லது ஜலபானம் செய்யவோ முடியாமலிருக்கும் நிபந்தனை உயர்ந்த ஜாதி இந்துக்கள் தங்களை நகைப்பாரகளென்றோ அல்லது அதற்கு அஞ்சியோ அல்லது அவர்கள் கிறிஸ்துவர்களாகாததற்கு முந்தி இருந்த முரட்டு வழக்கமோ இன்னும் காட்டுமிழக்காயிருக்கின்றன. ஆதித்திராவிட ஜன சமூகம் முன்னேறினாலொழிய தீண்டப்படாக் கிறிஸ்துவர்கள் சத்தியமாகவே முன்னேறமுடியவே முடியாது. தனக்காக வாழாமல் இளமையிலிருந்தே தன் உடன் பிறந்த மக்களின் சுயமரியாதையைக் காப்பாற்றுவதே தன் பிறப்புரிமை என்ற செம்மை நெறிபற்றி இடையறாது உழைத்து வருபவரும் சென்ற மூன்று ஆண்டுகளாக சென்னைச் சட்டசபையில் வீற்றிருந்து தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றமே குறியாகக்கொண்டு செயற்கரிய பல செயல்களை செய்ததுமல்லாமலும் சில காரியங்களை நிறைவேற்றியும் பல கவர்ன்மெண்டார் யோசனையிலுமிருந்துவரச் செய்தவருமான வீரர் ஸ்ரீமான் ஆர். வீரய்யன் எம். எல். சி. அவர்களை அடிக்கடி வருகிற சென்னைச் சட்டசபை காரியங்களில் ஆதித்திராவிட பிரதிநிதியாக எடுத்துக்கொள்ள வேணுமென்பதாய் சென்னை துரைத்தனர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆதித்திராவிட பிரதிநிதியாக நியமித்தால் ஆதித்திராவிடரின் துயரம் சூரியனைக்கண்ட பனிப்போல் நீங்கும் என்பதற்கு யாதொரு ஆட்சேபனையுமில்லையென்று தெரிவித்துக்கொள்ளுகிறோம் என பெருந்தலையூர் கே. எம். தானியேல் மேஸ்திரி அறிவிக்கிறார்.

---

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

## ராஜவைத்ய ஆஸ்ரமம்.

சரஸ்வதி விலாசம் பிரஸ்சுக்கு எதிரில் செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்

ஆயிரக்கணக்கான

ஆயிரக்கணக்கான வியாதி ...யஸ்த...ர்கள்

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.



குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!

கோயமுத்தூர்

## இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)

(1924-ஆம் டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

| | | | |
|---|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ... ... | ரூ. | 5,00,000—0—0 |
| வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு... | ... | ரூ. | 73,900—0—0 |
| தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது ... | ... | ரூ. | 50,430—0—0 |
| டிபாசிட்டுகள் | ... ... | ரூ. | 86,346—7—4 |
| Reserve Fund காப்புத் திரவியம் | ... ... | ரூ. | 2706—0—0 |
| கடை முதல் தொகை | ... ... | ரூ. | 1,50,275—9—5 |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ்பிக்சேட் டிபாசிட்டு இரண்டு வருஷ கெடு:—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணா. இதற்கு பிரதி மாசமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்சேட் டிபாசிட்டு ஒரு வருஷ கெடு:—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20, 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் (அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசனம் பங்கு 1க்கு 0—8—0 எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் ஒன்றுக்கு, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசனம், ரண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையில் ரூபாய் 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும் செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள் செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி கெம்பரை பிரைஸ் சீட்டில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஐவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிடரானால், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும், ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்குடையவரானால், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாசிட்டரானால், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வது பக்கம் (உ) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26. ஜி. ராமச்சந்திர செட்டியார், மானேஜிங் டைரக்டர்.



ஸ்ரீவில்லிபுத்தூர்

## பி. பி. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

அரரூட் பிஸ்கட்.

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

சூஸ்பரி பிஸ்கட்.

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

பழம் கேக்.

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.



ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தன தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

## சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை ... பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபால் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபர ... கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரப் ...,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, ... திருச்சி


## வர்த்தக யுக்தி.

ஸ்ரீமான் M. A. நெல்லையப்பர் எழுதியது.

இந்நூல் நாவலல்ல—கதையல்ல. ஒவ்வொருவருக்கும் ஊக்கத்தை ஊட்டி உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவரத்தக்க அருமையான புத்தகம். இதுவரை நாலாயிரம் பிரதிகள் விசேஷ விளம்பரமின்றிச் செலவாகிவிட்டன. இது புதிய பதிப்பு. விரிவான நூல். அதிக விஷயங்கள் அடங்கியுள்ளது. படிக்கப்படிக்க உற்சாகத்தை தரக்கூடியது. அவ்வளவும் அநுபவங்கள்.

வர்த்தகயுக்தி என்ற பெயருக்கேற்ப அநேக யுக்திகளும், வியாபாரம் செய்வதற்கான வழிகளும், விளம்பரம் செய்யவேண்டிய முறைகளும் கோர்வையாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

விலை அணா 12. தபாற்செலவு வேறு. கேட்லாக் இனாம்.

அமிர்தம் அண்டு கோ.,
165, பிராட்வே, தபாற்பெட்டி 222,
மதராஸ்.

# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது.

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமுமில்லை. எவ்வித பத்தியமுமில்லை. பாலர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரிகள் உள்பட எல்லோரும் எக்காலத்தும் பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டியவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது "ஆநந்த குண போதினி."

☞ ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவந்து உலவுகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.



ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

**ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.**

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பாஷை சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புஸ்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புஸ்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு 1½ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.




முழு காலிகோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0.
அர்ஜெண்ட் ஆர்டர் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.



இனாம்! இனாம்!
சர்வரோக சம்ஹாரி
**அமின்சார காந்தி.**

இதை எல்லா வியாதிகளுக்கும் துளிக் கணக்கில் உபயோகித்தால் உடனே குணமடையலாம். பாலர்முதல், விருத்தர்வரை யாதொரு பத்தியானுபானமின்றி, உபயோகிக்கக் கூடிய முறையில். உயர்ந்த சரக்குகளால், தயார் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இது ஒவ்வொரு குடும்பத்திலும், கப்பல், ரயில்வே பிரயாணிகளிடத்திலும் இருக்கவேண்டியது அவசியமாதலின், இன்றே அமின்சார காந்தியை வரவழைத்துப் பரீக்ஷியுங்கள். வெளியூர் ஏஜண்டுகள் தேவை. பாதிரி மருந்தும், கேட்லாக்கும் இனாம். விலை பாட்டல் 1க்கு ரூ 2.

தபால் சார்ஜ் வேறு
அமின்சார காந்தி டிபோ,
சேலம், மார்கெட்.





பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டும், தனித் தனி சாமான்களாயும் விலைசகாயமாய் கிடைக்கும். கேடலாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.